# பிறதுறை விருப்பப்பாடம்

# தமிழ் இலக்கிய வரலாறு II

அலகு 2

தமிழில் சிறுகதை

தமிழில் புதினம்

தமிழில் புதுக்கவிதை

தமிழில் ஹைகூ - சென்ரியு - குக்கூ

27

# தமிழில் சிறுகதை

### புனைகதை இலக்கியம்

சிறுகதை, நாவல் இவ்விரு இலக்கிய வகைகளும் பொதுவாகப் புனைகதைகள் என அழைக்கப்படுகின்றன.

### கதை வடிவம்

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிச் சிறக்கும் இலக்கியங்களில் சிறுகதை குறிப்பிடத் தகுந்த ஒன்று. அளவிற் சிறியதாய் இருப்பதைச் சிறுகதை என்பர். ஏறக்குறைய ஒரு மணி நேரத்திற்குள்ளாகப் படித்து முடித்துவிடக் கூடியதாகவும் ஒரே மூச்சில் படித்து முடித்துவிடக் கூடியதாக இருப்பனவெல்லாம் இதில் அடங்கும். சிறுகதையில் எடுப்பும் முடிப்பும் குதிரைப்பந்தயம் போல் விறுவிறுப்பும் ஈர்ப்பும் இனிமையும் பெற்றிருக்க வேண்டும். சிறுகதை என்பது வாழ்க்கையில் நிகழும் ஒரு நிகழ்ச்சியை ஓர் உணர்ச்சியைக் கருவாகக் கொண்டு பின்னப்படுவது. ஒரு பாத்திரம் ஒரு மன உணர்ச்சி ஒரு நிகழ்ச்சி என ஏதேனும் ஒன்றை மட்டும் செறிவாக அமைத்துப் புனையப்படுவது சிறுகதை.

### கதைநடை

தேவையற்ற வருணனைகள் சிறுகதையில் இடம் பெறக்கூடாது. சொற்கட்டு மிக முக்கியமானது. பயனற்ற ஒரு சொல்கூட சிறுகதையில் அமையக்கூடாது. கதையின் நடை எளிமையாகவும் இனிமையாகவும் இருக்க வேண்டும். ஒரு கதையைப் படித்து முடித்த பின்னர் அதில் முழுமையும் நிறைவும் இருப்பது புலனாக வேண்டும். இத்தகைய முழுப் பண்பைப் பெறாதவை வெறும் நிகழ்ச்சிக் கோவையாக அமையுமே யன்றி சிறுகதை ஆகா.

Scanned by CamScanner

**கதைப்பொருள்**

சிறுகதையில் இந்தக் கதைப் பொருள்தான் அமைய வேண்டும் என்ற மரபு இல்லை. ஆர்வத்தைத் தூண்டும் எதுவும் கதைப் பொருளா கலாம். காணும் பொருள் ஒன்றிலிருந்து கலைஞன் பெறும் உணர்வு கதை யாகிறது. சிறு நிகழ்ச்சி, சூழல், அரிய காட்சி, நிகழ்ச்சிகளின் கோவை, உலகமாந்தரின் ஏதாவது ஒரு கூறு, சிறிய அனுபவம், அறச்சிக்கல் ஆகிய ஏதாவது ஒன்று கதைப் பொருளாகலாம். இவற்றில் பிற இருப்பின் அவையும் பொருளாகலாம்.

**கதை ஒருமை**

சிறுகதை பொருளின் மையக்கருத்தை மட்டும் விளக்க வேண்டும். கதையின் சுவைக்கு இது இன்றியமையாதது. தொடக்கம், நடு, முடிவு எங்கும் ஓர் உணர்வே ஆட்சி செலுத்த வேண்டும். கதைநிகழ்ச்சி அனைத்தும் அவ்வுணர்வின் போக்கிலேயே வாசகரை அழைத்துச் செல்ல வேண்டும். இதை உணர்ச்சி விளைவின் ஒருமைப்பாடு என்பர்.

**கதை அமைப்பு**

ஒருகதையின் பொருளும் நோக்கும் எதுவாகவாயினும் இருக்கலாம். அதன் இயல்பு ஒரு வகையில் உறுதியாக இருக்க வேண்டும். இந்தக் கதையை வளர்த்திருந்தாலும் எவ்வித பயனும் நிகழப்போவதில்லை என்று வாசகர் எண்ணும் அளவுக்கு முடிவு இருக்க வேண்டும். கதையில் இடம் பெறும் ஒவ்வொன்றும் கதையின் நோக்கத்தை நிறைவேற்றுவதாக இருக்க வேண்டும்.

**கதைக் குறிக்கோள்**

வாசகருக்குக் கலைச்சுவை வழங்குவதுதான் சிறுகதைக் குறிக் கோளாகும். இயற்கை வாழ்வின் கூறு, ஒரு பண்பு, செயல், ஒன்றன் இயக்கம், அவற்றில் ஒன்றைக் கலைச்சுவை குறையாது வெளிப்படுத்து வதே சிறுகதையின் குறிக்கோள் என்பர்.

**கதை வகைகள்**

சிறுகதை எழுதுவதற்குரிய வழிகளை மூன்றாகக் கூறுகிறார் ஸ்டீவன்சன்.

கதைக்குரிய கருப்பொருளை முடிவு செய்து அது முற்றுப் பெறப் பாத்திரங்களை அமைத்தல். இவ்வகையைக் கருவால் வந்த கதை என்பர்.

Scanned by CamScanner

குறிப்பிட்ட குணச் சித்திரத்தை முடிவு செய்து கொண்டு நிகழ்ச்சிகளையும் சூழல்களையும் அமைத்தல் இவ்வகையைக் குணச் சித்திரத்தால் வந்த கதை என்பர். குறிப்பிட்ட உணர்வைத் தோற்றுவிக்க ஒரு குறிப்பிட்ட இயற்கைச் சூழலைக் கொண்டு கதை அமைத்தல். இவ்வகையை உணர்ச்சிப்பதிவால் வந்த கதை என்பர்.

**தமிழின் முதற் சிறுகதை**

இத்தகைய இலக்கணப் பண்புகளை உடைய சிறுகதை இலக்கியம் மேலை நாட்டவர் தொடர்பால் தமிழில் அமைந்த உரைநடை வளர்ச்சியின் பயனாகப் புதிய வகையாகப் பரிணமித்தது. சிறுகதையின் பிறப்பகம் அமெரிக்கா. வித்திட்டவர் எட்கார் ஆலன்போ என்பவர். தமிழில் தொடங்கி வைத்த பெருமைக்குரியவர் வ.வே.சு.ஐயர் (1881-1925) இவருடைய மங்கையர்க்கரசியின் காதல் என்ற தொகுப்பே முதல் சிறுகதை நூல். இதில் இடம் பெற்றுள்ள 'குளத்தங்கரை அரசமரம் சொன்ன கதை' என்பதே தமிழின் முதல் சிறுகதையாகும்.

இதற்கு முன்னர் தமிழில் சிறுகதைகள் இல்லையா என்ற வினா எழலாம். வீரமாமுனிவரின் பரமார்த்த குரு கதை, தாண்டவராய முதலியாரின் பஞ்ச தந்திர கதைகள், செல்வக் கேசவராய முதலியாரின் அபிநவக் கதைகள் முதலானவை இருந்தாலும் அவையெல்லாம் சிறுகதையல்ல. ஏனெனில் இவற்றில் சிறுகதைக்குரிய இலக்கணம் இல்லை. 1927இல் வெளிவந்த வ.வே.சு.ஐயரின் நூலே சிறுகதை இலக்கணம் கொண்டதாக அமைந்தது. அய்யரின் குளத்தங்கரை அரசமரம் சொன்ன கதை நெஞ்சையுருக்கும் கதையாகும். சிறுகதை மாந்தர்கள் கண்முன் உலவுபவர்களாக, நாம் அறிந்தவர்கள் போல படைக்கப்பட்டுள்ளனர். சிறுகதைக்குரிய நிறைவடிவம் இவர் கதைகளில் இல்லை என்பர். ஆயினும் அவ்விலக்கிய வகை வழிகாட்டி என்பதால் இவரைச் 'சிறுகதை இலக்கியத் தந்தை' என்பர்.

அய்யரோடு பாரதியாரும் ஆங்கில பிரெஞ்சு மொழிக் கதைகளைத் தமிழில் தந்தார். அவை சமூகச் சீர்திருத்தக் கதைகள் ஆயினும் அவற்றில் சிறுகதைக்குரிய உருவம் இல்லை. உ.வே.சா. சிறுசிறு நிகழ்ச்சிகளைக் கதையாக்கிக் கொடுத்தார். கண்டதும் கேட்டதும், நல்லுரைக்கோவை' அவ்வகையின். ஆயினும் அவை பழைய வரலாறுகள். மாதையாவின் குசிகள் குட்டிக் கதைகள் சமூகச் சீர்திருத்த நோக்கம் கொண்டவை. ஆயினும் சிறுகதை இலக்கணம் பெறாதவை.

Scanned by CamScanner

# சிறுகதை இலக்கியம் வளர்த்த எழுத்தாளர்கள்

**மணிக்கொடி காலம் - முன்னோடி நால்வர்**

நல்ல கதைகள் தோன்றிய காலம் மணிக்கொடி வெளி வந்த காலமே. அதில் கதை எழுதியவர்கள் மணிக்கொடி எழுத்தாளர்கள் எனப்பட்டனர்.

**புதுமைப்பித்தன்**

உலகச் சிறுகதைகளுடன் ஒப்பிடும் அளவுக்குச் சிறுகதைகளைப் படைத்தவர். சிறு கதை இலக்கணத்தை உருவாக்க வல்ல சிறுகதைகளை எழுதியவர். இவரைச் சிறுகதை மன்னன் என்றும், தமிழ்நாட்டின் மாபசான் என்றும் போற்றுவர். அங்கதச்சுவை இவர் கதைகளில் இழையோடியிருக்கும். கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும், ஒரு நாள் கழிந்தது, கபாடபுரம், பிள்ளையார் சதுர்த்தி, அகலிகை, சாபவிமோசனம் ஆகியவை புகழ்பெற்ற சிறுகதைகளாகும்.

**கு.ப.ராஜகோபாலன்**

பாலியல் சிக்கல்களை மிகுதியாகப் பேசுபவை இவரின் சிறுகதைகள். உயிருள்ள மாந்தர்களைப் படைப்பதில் வல்லவர். விடியுமா, காணாமலேயே காதல், புனர்ஜென்மம், கனகாம்பரம் குறிப்பிடத்தக்கவை.

**ந.பிச்சமூர்த்தி**

இவருடைய சிறுகதைகளில் இந்தியப் பழமை மரபு மேலோங்கி இருக்கும். சிறுகதையின் சாதனை என்று இவரை மதிப்பிடுவது ஏற்புடையத் தக்கது என்புர். இவருடைய சிறுகதைத் தொகுப்பு 'பதினெட்டாம் பெருக்கு' என்பதாகும்.

**மௌனி**

இவரைச் சிறுகதைத் திருமூலர் என்பார் புதுமைப்பித்தன். இந்தியத் தத்து மரபுவேதாந்த விசாரணை அடிப்படையில் சிறுகதைகளைப் படைத்தவர் என்பர். இவை உயர் தரம் உடையவை. எளிதில் புரிந்து கொள்ள இயலாதவை. படிமம், குறியீடுகள் அமைந்திருக்கும் கவிதை நடையிலான போக்குப் படிப்பார்க்குச் சோர்வை உருவாக்கும் தன்மையது. அழியாச்சுடர், மனக்கோலம் ஆகியவை இவரின் புகழ் பெற்ற சிறுகதைகள் ஆகும். புதுமைப்பித்தன், கு.ப.ரா., பிச்சமூர்த்தி, மௌனி ஆகிய நால்வரையும் சிறுகதை முன்னோடிகள் எனலாம்.

Scanned by CamScanner

**பி.எஸ்.இராமையா**

சமூகப் பிரச்சனைகளைப் பற்றி எழுதுபவர். அவற்றுக்குரிய தீர்வுகள் பற்றிச் சிந்தித்த சிந்தனாவாதியாக இவரை அடையாளம் காண இயலாது. இவருடைய கதைகளில் கதை சொல்லுதலையே முதன்மையாக எண்ணி அமைக்கப்பட்ட வடிவம் இருக்கும் 'நட்சத்திரக் குழந்தைகள்' என்ற சிறுகதை புகழ்பெற்றது ஆகும்.

**ந. சிதம்பர சுப்பிரமணியன்**

இவருடைய சிறுகதைகள் வடிவச் செம்மை மட்டும் கொண்டிருக்கும். பழைமைவாதியாக இவரை அடையாளம் காட்டுபவை இவருடைய சிறுகதைகள்.

**சி.சு. செல்லப்பா**

இவர் தன் சிறுகதைகளின் உத்தி முறைகளில் மிகுந்த கவனம் செலுத்தியவர். இக்கவனம் முழுமையான வெளிப்பாட்டில் அமையாததால் இவருடைய கதைகள் கலைகள் ஆகவில்லை.

**தி. ஜானகிராமன்**

சிறுகதைகளில் அழகியல் பரிமாணங்களை அமைத்தவர். உணர்வு களுக்கு முதலிடம் கொடுத்துக் கதை படைத்தவர். உரையாடலைக் கொண்டே சிறுகதையின் அனைத்துக் கூறுகளையும் விளக்கியவர். பெண்களின் பிரச்சினை தொடங்கி அனைத்து மன உணர்வுகளையும் மிக எதார்த்தமாகச் சிறுகதைகளில் கொண்டு வந்து சிக்கல்களைச் சிறுகதை களில் கருவாய் அமைத்தவர். இவருடைய 'சிலிர்ப்பு' கொட்டு மேளம். அக்பர் சாஸ்திரி. கோபுர விளக்கு ஆகியவை புகழ்பெற்ற சிறுகதை களாகும்.

**கு. அழகிரிசாமி**

கரிசல் வட்டார இலக்கிய முன்னோடி. இவருடைய சிறுகதைகள் எளிமையானவை. மனித இயல்புகளைப் படம் பிடித்துக் காட்டுபவை. அழகுணர்ச்சியும் சமுதாயச் சிந்தனையும் கொண்ட இவருடைய மண் மணம் தனித்துவம் மிக்கது. கரிசல் மண்ணின் வட்டாரப் பகைப்புலத்தை யும் மனிதர்களையும் விதம் விதமாகக் கொண்டு இவர் தந்த சிறுகதைகள் சிறப்புடையவை. இவருடைய 'சிரிக்கவில்லை', 'தவப்பயன்' குறிப்பிடத் தக்கவை.

Scanned by CamScanner

**லா.ச. ராமாமிருதம்**

சிறுகதைகளில் ஆழமான மன உணர்வுகளைக் காட்ட முயலுபவர். ஆயினும் இவருடைய கதைகள் அனைவராலும் புரிந்து கொள்ளும் வகையில் அமைவதில்லை. தமிழ்ச் சிறுகதையில் அதிகமாகப் பேசும் ஆசிரியர் என்று கூறுவர். வாழ்க்கை முரண், மனித முரண் என்ற முரண்களைச் சுட்டிக் காட்ட முயன்று அவற்றுக்குத் தீர்வு எதையும் சொல்லாமல் செல்பவர் என்ற விமர்சனத்திற்கு ஆளானவர். இவருடைய 'ஜனவரி', 'இதழ்கள்' ஆகிய சிறுகதைத் தொகுப்புகள் சிறப்புடையன.

**அசோகமித்திரன்**

நடுத்தர வர்க்க மனிதனைப் பல்வேறு நிலைகளில் நுட்பமாகப் படைத்தவர். எளிமை, இனிமை, சொற்சிக்கனம், படபடப்பற்ற பாவனை, வீண் வருணனை இன்மை, உரையாடல்களில் இயல்பான மொழி படைத்தல் முதலியன இவருடைய சிறுகதைகளின் சிறப்பு.

'அப்பாவின் சிநேகிதர்' என்னும் சிறுகதைத் தொகுப்புக்காகச் சாகித்ய அகாதெமி பரிசு பெற்றவர்.

உரிமை வேட்கை, உத்தர ராமாயணம், ஒரு கிராமத்து அத்தியாயம், காலமும் ஐந்து குழந்தைகளும், தந்தைக்காக முறைப் பெண், வாழ்விலே ஒருமுறை, விமோசனம் என்பன இவருடைய சிறுகதைத் தொகுப்புகள்.

**கல்கி**

கல்கிக்கு உரிய தனிச்சிறப்பு கதை கூறும் பாங்கு ஆகும். நகைச் சுவையாகக் கூறுதல், ஆசிரியர் குறுக்கீடு, இடைவிடாது கதை கேட்கத் தூண்டும் இனிமை ஆகியவை இவருடைய கதைகளில் காணப்படும் பண்புகளாகும். திருடன் மகன் திருடன் , வீணை பவானி இவருடைய சிறுகதைகள்.

**அகிலன்**

ஆரவாரமற்ற, ஆனால் அழுத்தமான படைப்புகளைத் தந்த சிறு கதை எழுத்தாளராவார். இவருடைய'நிலவினிலே' முதலிய சிறுகதைத் தொகுதிகள் சிறுகதை இலக்கணத்தோடு பொருந்திப் படிப்பவர்க்கும் பயனை ஊட்டுவன,

'பூச்சாண்டி', 'உயிர்த் துளி' முதலான இவர் கதைகள் பிறநாட்டு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

Scanned by CamScanner

**ஜெயகாந்தன்**

சிறுகதை உலகில் தனக்கென ஓர் இடத்தைப் பெற்றுத் திகழ்பவர் ஜெயகாந்தன். சமுதாயத்தின் சீர்கேடுகளைப் படம் பிடித்துக் காட்டித் தீர்வுகளைச் சொல்ல முயலுபவர் இவர். இவர் கதைகள் ஆற்றல் மிக்கவை. புதுமைப்பித்தனைப் போல் இலக்கணம் வகுக்கத் தக்க சிறுகதைகளைப் படைத்தவர். இவருடைய 'யாருக்காக அழுதான்?' 'ஒரு பிடிசோறு', அக்னிப் பிரவேசம், 'இனிப்பும் கரிப்பும்' முதலிய சிறுகதைகள் சிறந்தவை.

**வல்லிக்கண்ணன்**

இன்றைய சிறுகதை ஆசிரியர்களில் மிகக் குறிப்பிடத்தக்கவர். 500க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியவர். கல்யாணி முதலிய கதைகள், நாட்டியக்காரி, வல்லிக்கண்ணன் கதைகள், ஆண் சிங்கம், வாழ விரும்பியவன் அருமையான துணை மனிதர்கள், சுதந்திரப் பறவைகள் முதலானவை.

**சுந்தரராமசாமி**

ஆழ்ந்த அனுபவமும், வாழ்க்கை பற்றிய கூர்ந்த நோக்கும், தெளிவான அறிவும் இவர் சிறுகதைகளில் வெளிப்படும். வடிவம், சொற்செட்டு, தொனி, படிமம், குறியீடு கொண்ட சிறுகதைகளைப் படைப்பதில் திறமை வாய்ந்தவர். சிறுகதையின் நுட்பங்களை அறிய விரும்புபவர்களுக்கு இவை மூலபாடமாகத் திகழ்வன. பல்லக்கு, நாடார் சார், நைவேத்தியம் போன்ற சிறுகதைகள் குறிப்பிடத் தக்கன.

**ஆ.மாதவன்**

பொருளாதார ஏற்றத்தாழ்வு தொடங்கி எந்தப் பிரச்சனையானாலும் நுட்பமாகக் கதை படைக்கும் கலைஞர். மனிதனின் இருப்பை உள்ளது உள்ளபடியே காட்டும் கதையாசிரியர்.

**வண்ணநிலவன்**

அன்பின் பல்வேறு கோணங்களை நெகிழ்ச்சியுடன் படைப்பவர். சிறுகதையைக் கலை நயத்தோடு தொனி குறிப்புணர்தல், உணர வைத்தல் என்று பல இலக்கியத் திறன்களால் படைக்கும் ஆற்றல் கொண்டவர்.

**வண்ணதாசன்**

இயற்பெயர் கல்யாண சுந்தரம், கண் முன் காணும் நிகழ்ச்சிகளையும் மனிதர்களையும் கதைக் கருவாகவும் பாத்திரங்களாகவும் ஆக்கும் திறமை மிக்கவர். 'கலைக்க முடியாத ஒப்பனைகள்' தோட்டத்திற்கு வெளியிலும் சில பூக்கள், சமவெளி, பெயர் தெரியாமல் ஒரு

Scanned by CamScanner

பறவை நிலை, மனுஷா மனுஷா, கனிவு உயரப் பறத்தல் நடுகை என்பன இவருடைய படைப்புகள்.

**சுஜாதா**

அறிவியல் சிந்தையுடன் சிறுகதைகளைப் படைப்பதில் இவர் வல்லவர். நடுத்தர வர்க்க, நகரவாழ் மக்களின் சூழல்களைக் கதைக் கருவாக்கிக் கதை படைத்து அதில் வெற்றி பெற்றவர். பதினெட்டு கதைகள், ஸ்ரீரங்கத்துத் தேவதைகள், இரயில் புன்னகை, நிஜத்தைத் தேடி போன்ற படைப்புகளைத் தந்தவர்.

**மாலன்**

சமுதாய நோக்கோடு சிறுகதைகளைப் படைத்து வருபவர்களில் இவர் குறிப்பிடத்தக்கவர். 'மாறுதல் வரும்' 'கல்லிற்குக் கீழும் பூக்கள்' 'இறகுகளும் பாறைகளும்' முதலியன இவருடைய படைப்புகள்.

**சு. சமுத்திரம்**

அண்மைக்காலத்தில் புகழ்பெற்று விளங்கிய எழுத்தாளர். நலிவுற்ற மக்களின் வாழ்வில் வேரூன்றி நிற்பவர். பொருளாலும் நடையாலும் வடிவ நேர்த்தியாலும் குறிப்பாற்றலாலும் சிறந்து விளங்கும் சிறுகதை களைப் படைத்தவர். இவருடைய மானுடத்தின் நாணயங்கள் என்ற சிறுகதைத் தொகுதி குறிப்பிடத்தக்க ஒன்று. இவர் படைப்புகள் குற்றம் பார்க்கின், காகித உறவு, ஒரு சத்தியத்தின் அழுகை, உறவுக்கு அப்பால், பிணந்தின்னும் சாத்திரங்கள், சமுத்திரம் கதைகள்.

**மேலாண்மை பொன்னுசாமி**

மேலாண்மறை என்ற ஊரைச் சார்ந்தவர். கிராமிய மனத்தோடு சிறுகதைகளைப் படைப்பவர். 'சிபிகள்' பூக்காத மாலை, மானுடப் பிரவாகம், பூச்சுமை, கணக்கு, விரல், தாய்மதி, உயிர்க் காற்று ஆகியவை இவருடைய சிறுகதைத் தொகுப்பு நூல்கள்.

**பிரபஞ்சன்.**

இயற்பெயர் வைத்தியலிங்கம். சமுதாய நோக்கில் சிறுகதைகளைப் படைப்பவர். 'ஒரு ஊரில் இரண்டு மனிதர்கள்', 'நேற்று மனிதர்கள்' பிரபஞ் சன் கதைகள், விட்டு விடுதலையாகி, மனிதர்களைத் தேடி, பூக்களை மிதிப்பவர்கள், வசந்தம் வரும் முதலான சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார்.

Scanned by CamScanner

**தோப்பில் முகமது மீரான்**

இசுலாமியச் சிறுகதை எழுத்தாளர்களில் இசுலாமிய மக்களின் பிரச்சனைகளைக் கதைக் கருவாக்கி இலக்கியம் படைத்தவர். இவருடைய படைப்புகள் 'அன்புக்கு முதுமை இல்லை', 'தங்கராசு', 'அனந்த சயனம் காலனி' முதலானவையாகும். மீரான் தன் கதைகளில் அடித்தளத்தில் உள்ள மனிதர்கள் அவர்களின் அடிமைத்தனங்கள், அவர்களைச் சுரண்டு பவர்களின் வாழ்க்கை நிலைகள் ஆகியவற்றை கதைக் கருவாக்குபவர்.

**சோ. தர்மன்**

கரிசல் மக்களின் மொழியைத் தனது வெளிப்பாட்டு மொழியாகக் கொண்டு படைப்பிலக்கியத்துறையில் சுவடுகள் பதித்து வருபவர். இதழ்கள் வழி தரமான சிறுகதைகளை வாசகர்களுக்குத் தருபவர். இவருடைய சிறுகதைகள் 'சோ.தர்மன் சிறுகதைகள்' எனும் பெயரில் முழுத்தொகுப்பாக வெளிவந்துள்ளது. தமிழுறவு, தூர்வை ஆகியன இவருடைய நாவல்கள்.

**பாவண்ணன்**

வாழ்க்கை முன்னிலைப்படுத்தும் சிக்கல்களை எதிர்கொள்ளும் மனிதர்களின் துக்கங்களையும், போராட்டங்களையும் சிறுகதைகளின் மூலம் கவனமாகப் பதிவு செய்து வருபவர். இவருடைய கதைகள் எதார்த்தத்தை மையமிட்டவை. வேர்கள் தொலைவில் இருக்கின்றன. பாவண்ணன் கதைகள், வெளிச்சம், வெளியேற்றம், நேற்று வாழ்ந்தவர் கள், வலை, அடுக்குமாளிகை, கடலோர வீடு ஆகியன இவருடைய சிறுகதைத் தொகுப்புகள்.

**தனுஷ்கோடி ராமசாமி**

குடும்ப உறவுகள் சிதைந்து வரும் இன்றைய சூழலில் கிராமத்துப் பின்னணியைக் கொண்டுச் சிறுகதைகளைப் படைப்பவர். மார்க்சிய சிந்தனையுடன் செயல்படுபவர். சிம்ம சொப்பனம், நாரணம்மா, சேதாரம், தீம்தரிகிட, வாழக்கை நெருப்பு, பெண்மை எங்கும் வாழ்க ஆகியன இவருடைய சிறுகதைத் தொகுப்புகள். தோழர் என்ற நாவலையும் நிழலும் ஒரு கவிதையும் என்ற குறு நாவலையும் படைத்துள்ளார்.

**தேனி சீருடையான்**

மனித நேயம், வாழ்வியல் கூறுகள், எதார்த்தம் மூன்றும் இவருடைய படைப்புகளுக்கு அடிப்படை. இவர் பெயர் எஸ்.கருப்பையா. ஆகவே...

Scanned by CamScanner

ஒரே வாசல், விழுதுகள், பயணம் ஆகியன இவர் தந்த சிறுகதைத் தொகுப்புகள். கடை இவருடைய சிறந்த புதினமாகும்.

**ஜெயமோகன்**

மானுட வாழ்வியலை நோக்கி விரியும் எழுத்துக்கள் இவருடையது. பல வகையான கதைக்கருக்களையும் கதைக்களங்களையும் கொண்டவை இவருடைய கதைகள். திசைகளின் நடுவே, மண், ஆயிரங்கால் மண்டபம், கூந்தல் ஆகிய சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. இவருடைய சிறுகதைகள் அனைத்தையும் தொகுத்து உயிர்மை பதிப்பகம் 'ஜெயமோகன் சிறுகதைகள்' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளது என்பது சுட்டத்தக்கது.

**எஸ். ராமகிருஷ்ணன்**

காலம், வெளி ஆகியவற்றைத் தாண்டி அதீத புனைவியலும் எதார்த்தமும் கலந்து வெளிப்படுபவை இவரது சிறுகதைகள். வெளியில் ஒருவன், காட்டின் உருவம், தாவரங்களின் உரையாடல், வெயிலைக் கொண்டு வாருங்கள், பால்யநதி என்பன இவருடைய சிறுகதைத் தொகுதிகளாகும். இவருடைய சிறுகதைகள் அனைத்தும் தொகுக்கப் பட்டு முழுத் தொகுப்பாக வெளிவந்துள்ளது.

**ஜே.பி. சாணக்யா**

அனுபவத்திற்கு வசப்படாத வாழ்க்கை, ஆண்-பெண் உறவுச் சிக்கல் ஆகிய கூறுகளை எதார்த்தத்துடன் சிறுகதைகளில் பதிவு செய்பவர். என் வீட்டின் வரைபடம், கனவுப் புத்தகம் ஆகிய இரண்டும் இவருடைய சிறந்த சிறுகதைத் தொகுப்புகளாகும்.

**யூ.மா.வாசுகி**

சிறந்த ஓவியராகவும் படைப்பாளராகவும் திகழும் மாரிமுத்து என்கிற யூ.மா.வாசுகி உயிர்த்துடிப்புள்ள சிறுகதைகளை வடித்துத் தருவதில் வல்லவர். உனக்கும் உங்களுக்கும், தோழமை இருள், உயிர்த்திருத்தல், அமுதப்படும் வலம்புரியாய் அணைந்ததொரு சங்கு என்பவை இவருடைய சிறுகதைத் தொகுதிகள் ஆகும்.

## பெண் எழுத்தாளர்களின் பங்களிப்பு

தமிழ் சிறுகதை இலக்கிய வளர்ச்சியில் பெண் எழுத்தாளர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. சிவசங்கரி, அனுராதாரமணன், வாஸந்தி,

Scanned by CamScanner

இந்துமதி, சூடாமணி, அநுத்தமா, திலகவதி, ஹெப்சிபா ஜேசுதாஸ், அம்பை, உமா மகேஸ்வரி ஆகியோர் சுட்டத் தகுந்தவர்கள். இவர்களுள் ஒரு சிலருடைய படைப்புகளைத் தருவது பொருத்தமாக அமையும்.

**சூடாமணி**

உள்ளத்தின் உணர்வோட்டங்களைக் கதையாக்கித் தருவதில் சிறந்தவர். பாத்திரப் படைப்பைப் புலப்படுத்தும் கதைத் தெரிவில் கவனம் செலுத்துபவர். 'ஒளியின் முன்' என்பது இவருடைய சிறுகதைத் தொகுப்பாகும்.

**அம்பை**

அம்பை சி.எஸ்.லஷ்மி என்ற புனைப்பெயரைக் கொண்ட எழுத்தாளர். பெண்கள் சார்ந்த சிக்கல்களை உக்கிரத்துடன் சிறுகதைகளில் பதிவு செய்து வருபவர். வீட்டின் மூலையில் சமையலறை, காட்டில் ஒரு மான் ஆகியன இவரது சிறந்த சிறுகதைத் தொகுப்புகள் ஆகும்.

**திலகவதி**

காவல்துறை அதிகாரியாக பணிபுரியும் இவர் இலக்கியத்திற்கான சாகித்ய அகாதெமி பரிசு பெற்றவர். குடும்பத்திலும் பணிபுரியும் இடத்திலும் பெண்கள் சந்திக்கும் சிக்கல்களைத் தனது கதைகளில் கருவாகப் பயன்படுத்துபவர். அரசிகள் அழுவதில்லை, வெளிச்சத்திற்கு வராத டைரி ஆகிய இரண்டும் இவரது சிறுகதைத் தொகுப்புகளாகும்.

**உமாமகேஸ்வரி**

வளர்ந்து வரும் சிறுகதை எழுத்தாளர். சமூக நோக்கும் பெண்ணியச் சிந்தனையும் இவரது கதைகளில் செறிவாக வெளிப்படும் தொலைதூரக் கடல் என்பது இவரது சிறுகதைத் தொகுப்பாகும்.

## சிறுகதை இலக்கியமும் இதழ்களும்

'இன்று மிகச் சிறப்புடையதாகத் திகழும் சிறுகதை இலக்கிய வளர்ச்சிக்கு மிக உதவியவை இதழ்களே எனலாம். தொடக்க கால இலக்கிய இதழ்களான பஞ்சாமிர்தம், விவாவக சிந்தாமணி முதலானவை சிறுகதைகளை வெளியிட்டுத் துணைபுரிந்தவை. வெகுஜன இதழ்களில் இடம்பெறும் சிறுகதைகள் இலட்சக்கணக்கான வாசகர்களைச் சென்று சேர்கின்றன. அதனால் சிறுகதை பெரும் வளர்ச்சி பெறுகிறது. இதழ்களில் பழைய தலைமுறைச் சிறுகதைகளை மீண்டும் மீண்டும்

வெளியிடுதல், புதியவர்களை அறிமுகப்படுத்துதல், சிறுகதைப் போட்டி நிகழ்த்துதல் போன்ற செயல்பாடுகள் மூலம் சிறுகதை இலக்கியம் சிறக்கும் நிலையைக் காணலாம். இவற்றை நோக்க இதழ்கள் பல்வேறு நிலைகளில் சிறுகதை இலக்கிய வளர்ச்சிக்கு உதவி வருகின்றன. சிறுகதைப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் அளித்தும் சிறுகதை இலக்கிய வளர்ச்சிக்கு இதழ்கள் துணை செய்கின்றன.

## தொகுப்பு முயற்சி

தமிழில் வெளிவரும் சிறுகதைகளை ஏதோ ஒரு வகையில் தொகுத்து வெளியிடும் முறையும் இன்றைய நிலையில் சிறுகதை இலக்கிய வளர்ச்சிக்கு உதவுவதாக உள்ளது. அல்லயன்ஸ் நிறுவனம் வெளியிட்ட தமிழ்நாட்டுச் சிறுகதைகள், சாகித்ய அகாதெமி, தேசிய புத்தக நிறுவனங்கள் வெளியிடும் தொகுப்புகள் இங்குக் குறிக்கத் தக்கவை. கடந்த 25 ஆண்டுகளாக இலக்கியச் சிந்தனை ஆண்டு தோறும் வெளியிடும் சிறுகதைத் தொகுப்புகள் முத்துக்குளியலில் நல்முத்தைத் தேடித் தருவதை ஒத்தவை. இலக்கிய வீதி என்ற அமைப்பும் அவ் வகையில் பணியாற்றி வருகிறது.

## தொகுப்புரை

சிறுகதை இலக்கியத்தின் வளர்ச்சிநிலை ஆலமரத்தின் தழைத் தோங்கும் தன்மை போன்றது என்று குறிப்பிடவேண்டும். வ.வே.சு. அய்யரில் தொடங்கிய சிறுகதையின் கருப்பொருள் காலந்தோறும் சிறுகதைகளில் பல வடிவங்களில் இடம் பெற்று வாசகர்களிடம் சென்று சேர்ந்து வருகின்றது. தனிமனித, சமுதாயப் பிரச்சனைகள் அனைத்துமே இன்று சிறுகதை வடிவம் கொள்கின்றன.

சிறுகதை என்பது வாழ்வியலின் ஏதாவது ஒரு பகுதியைக் கண்முன் காட்டுவதாக அமைந்துவிட்டது என்பது உண்மை. இலக்கிய வகையில் சிறுகதையே வாழ்வியல்பற்றி அலசி ஆராய்கிறது என்பதே அதற்குரிய சிறப்பாகும்.

Scanned by CamScanner

28

# தமிழில் புதினம் (நாவல்)

**புதினம்: நாவல்: நவீனம்:**

சிறுகதை, நாவல் இரண்டும், ஐரோப்பியர் வருகையால் தமிழுக்குக் கிடைத்த இரு இலக்கிய வகைகளாகும். பொதுவாக இரண்டையும் புனைகதைகள் என்பர். நாவல் என்பது கிரேக்கச் சொல். இதற்குப் புதியது என்பது பொருள். இந்த அடிப்படையிலே இது தொடக்கத்தில் 'நவீனகம்' என்றும் தற்பொழுது 'புதினம்' என்றும் அழைக்கப்படுகிறது. ஆயின் நாவல் என்பதே பொதுச் சொல்லாக எல்லா இந்திய மொழிகளிலும் வழங்கப்படுகிறது.

நாவல் இலக்கியம் ஒரு நெடிய கதைப் போக்கினைக் கொண்டது. அறிஞர்கள் சங்கத் தனிப்பாடல்களோடு சிறுகதை இலக்கியத்தையும், காப்பியங்களோடு நாவல்களையும் ஒப்பிட்டுக் காண்பர்.

**முதல் மூன்று தமிழ் நாவல்கள்**

தமிழின் முதல் மூன்று நாவல்களாகப் பின்வருவனவற்றைக் குறிக்கலாம்.

1. மாயூரம் வேதநாயகம் பிள்ளை - 'பிரதாப முதலியார் சரித்திரம்'
2. அ.மாதவையா - பத்மாவதி சரித்திரம்
3. இராஜம் ஐயர் - கமலாம்பாள் சரித்திரம்

**முதல் மூன்று நாவல்களின் பொதுத்தன்மைகள்**

இம்முதல் மூன்று நாவல்களிடையே சில பொதுத்தன்மைகள் நிலவுகின்றன அவை.

1. மூன்றிலும் 'சரித்திரம்' எனும் பின் ஒட்டு அமைதல்.
2. அக்காலத்தில் எழுச்சியுடன் இருந்த விடுதலைப்போர் குறித்த பதிவுகள் இந்நாவல்களில் காணப்படவில்லை.
3. மூன்று நாவல்களிலும் மகளிர் சிறப்பிடம் பெறுகின்றனர்.

Scanned by CamScanner

## நாவல் வகைகள்

தமிழ் நாவல்களை அவற்றின் உள்ளடக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு ஐந்து வகைகளாகப் பாகுபடுத்துவர். அவை,

1. வரலாற்று நாவல்கள் 2. சமுதாய நாவல்கள்
3. உளவியல் நாவல்கள் 4. துப்பறியும் தொடர் நாவல்கள்
5. அறிவியல் நாவல்கள் என்பவையாகும்.

## வரலாற்று நாவல்கள்

கடந்தகால முக்கியமான வரலாற்று நிகழ்வுகளுடன் படைப்பாளியின் கற்பனையும் கலந்து உருப்பெறுவது சரித்திர வகை நாவல்களாகும். ஆங்கிலத்தில் சர்.வால்டர் ஸ்காட் என்பவர் மிகச் சிறந்த வரலாற்று நாவலாசிரியராகக் கருதப்பெறுகின்றார்.

தமிழில் கல்கி, சாண்டில்யன், கோ.வி.மணிசேகரன், ஜெகசிற்பியன், போன்றோர் சிறந்த வரலாற்று நாவல்களைப் படைத்துள்ளனர். கல்கியின் பொன்னியின் செல்வன் தமிழின் தலைசிறந்த வரலாற்று நாவலாகக் கருதப்படுகிறது. சாண்டில்யனது கடல்புறா, யவனராணி போன்றவை வாசகர்களால் பெரிதும் விரும்பிப் படிக்கப்பட்ட வரலாற்று நாவல்கள்.

## சமுதாய நாவல்கள்

சமுதாயத்தில் நிகழும் நடப்பியல் சிக்கல்களை மையமாக வைத்து எழுதப்படுபவை சமுதாய நாவல்களாகும். சமுதாயச் சிக்கல்களை விவரிப்பதோடு அவற்றுக்கான தீர்வுகளையும் இவ்வகை நாவல்கள் முன் வைக்கின்றன.

நா.பார்த்தசாரதி, அகிலன், ஜெயகாந்தன் போன்றோர் தொடக்கத்தில் இவ்வகை நாவல்களை அதிகம் படைத்துள்ளனர். தற்பொழுது பிரபஞ்சன், பாவண்ணன், பெருமாள் முருகன் போன்றோர் இவ்வகை நாவல்களைப் பரவலாக்கி வருகின்றனர்.

## உளவியல் நாவல்கள்

ஒரு கதையினைக் குழப்பமில்லாமல் நேர்கோட்டில் சொல்லி முடிப்பது எனும் கொள்கையினைத் தொடக்க கால நாவல்கள் கொண்டிருந்தன. ஆனால் இப்பொழுது பல புதிய உத்திகளின் பின்னணியில் நாவல்கள் விவரிக்கப்படுகின்றன. ஆண், பெண் உறவு நிலைகளில் ஏற்படும் சிக்கல்களை இன்றைய நாவலாசிரியர்கள் உளவியல் நோக்கில் அணுகுகின்றனர்.

Scanned by CamScanner

அவ்வகையில் தி.ஜானகிராமனது 'அம்மா வந்தாள்' 'மோகமுள்' , ஜெயகாந்தனது 'சில நேரங்களில் சில மனிதர்கள்' சிறந்த உளவியல் நாவல்களாகும். நகுலன், லா.ச.ராமாமிருதம் போன்றோர் கதை மாந்தர்களின் எண்ண ஓட்டங்களையே அதிகம் தமது நாவல்களில் விவரிக்கின்றனர்.

4. துப்பறியும் தொடர் நாவல்கள்

தமிழில் துப்பறியும் நாவல்களை வடுவூர் துரைசாமி ஐயங்கார், ஆரணி குப்புசாமி முதலியோர் தொடங்கி வைத்தனர். துப்பறியும் நாவல்களுக்கென தனியாக விதிமுறைகள் உள்ளன. அவை

1. நாவலின் தொடக்கத்தில் கொலை, கொள்ளை போன்ற அசம்பாவிதங்களில் ஏதேனும் ஒன்று நிகழும்.
2. அதனை யார்? எப்படி? செய்தார்கள் என விவரிப்பதில் படிப்போர்க்கு விறுவிறுப்பு ஏற்படும்.
3. காவலர்களால் கண்டுபிடிக்க இயலாத இச்சம்பவங்களைத் தனி மனிதராக வரும் ஒரு துப்பறிவாளர் ஆராய்ந்து கண்டு பிடிப்பார்.
4. நாவலின் இறுதியில் யாருமே எதிர்பாராத ஒருவர் குற்றவாளி யாக முன் நிறுத்தப்படுவார்.

துப்பறியும் நாவல்கள் அனைத்திலும் மேற்குறிப்பிடப்பட்ட தன்மையினைக் காணலாம். இத்தகு நாவல்களில் பெரும்பாலானவை இதழ்களில் தொடர்களாக வருபவை. அதனால் படிக்கின்ற வாசகர் களுக்கு ஆர்வமூட்டுவதற்காக ஒவ்வொரு வாரத்தின் இறுதியிலும் எதிர்பாராத சம்பவம் நிகழும்.

தமிழில் சுஜாதா இவ்வகை நாவல்களைப் பிரபலப்படுத்தினார். அவரைத் தொடர்ந்து புஷ்பா தங்கதுரை, ராஜேஷ்குமார், பட்டுக் கோட்டை பிரபாகர் போன்றோர் இவ்வகை நாவல்களை அதிகம் எழுதி வருகின்றனர்.

அறிவியல் நாவல்கள்

அண்மைக்காலமாகத் தமிழில் எழுதப்பட்டு வரும் நாவல்களுள் அறிவியல் நாவல்களும் ஒன்றாகும்.

வரலாற்று வகை நாவல்கள் கடந்தகால வரலாற்றுச் செய்திகளுக்குக் கலை வடிவம் தருகிறது. எனில் அறிவியல் நாவல்கள் எதிர்காலம் பற்றிய

Scanned by CamScanner

கற்பனைகளை விவரிப்பவை எனலாம். தமிழில் அறிவியல் வகை நாவல்களின் தந்தை என எழுத்தாளர் சுஜாதாவை அழைக்கலாம்.

இவரது ஜீனோ, மீண்டும் ஜீனோ போன்ற நாவல்கள் குறிப்பிடத் தக்கவை. இவை தொலைக்காட்சித் தொடர்களாகவும் வெளிவந்துள்ளன. தமிழில் அறிவியல் நாவல்கள் இன்னமும் ஆரம்ப நிலையிலேயே உள்ளன.

## தமிழின் தலைசிறந்த நாவலாசிரியர்களும் அவர் தம் படைப்புகளும்

### வேதநாயகம் பிள்ளை

தமிழின் முதல் நாவலாசிரியர் எனும் பெருமைக்குரியவர். மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றியவர். இவரது பிரதாப முதலியார் சரித்திரம், சுகுண சுந்தரி ஆகிய இரு நாவல்களும் குறிக்கத் தகுந்தவை. மெல்லிய நகைச்சுவையுணர்வு இவரது படைப்புகள் அனைத்திலும் இழையோடும்.

### பி.ஆர். ராஜம் ஐயர்

வேதாந்த ஆய்வில் வல்லமை மிக்க இவர், எழுதிய நாவல் கமலாம்பாள் சரித்திரம் ஆகும். இளைஞரின் காதல், நடுத்தர வயதினர் இல்லறவாழ்வின் மோதல், கிராமிய வாழ்வு போன்றவற்றைக் கமலாம்பாள் சரித்திரம் படம் பிடித்துக் காட்டும். இதழில் தொடராக வெளிவந்து அச்சாக்கம் பெற்ற முதல் நாவல் இவரது கமலாம்பாள் சரித்திரம் ஆகும்.

### அ. மாதவையா

அ. மாதவையா தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் நாவல்கள் படைத்த சிறப்புக்குரியவர். சுங்கத் துறையில் உயரதிகாரியாகப் பணியாற்றியவர். இவரது நாவல்களில் பத்மாவதி சரித்திரம், முத்து மீனாட்சி, பாரிஸ்டர் பஞ்சநாதம் ஆகியவை குறிப்பிடத் தகுந்தவை. தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில்'கிளார்ந்தா' எனும் நாவலைப் படைத்துள்ளார். பெண் முன்னேற்றம், பெண்ணியச் சிக்கல்கள் ஆகியவை இவரது நாவல்களின் மையப் பாடுபொருளாகியுள்ளன. இவர் தமிழ் நாட்டின் 'தாக்கரே' எனச் சிறப்பிக்கப்படுகின்றார்.

### கே.எஸ்.வேங்கடரமணி

தமிழின் முதல் காந்திய நாவலாசிரியர் இவரே. விடுதலைப்போர் குறித்த பதிவுகள் இவரது நாவல்களிலேயே முதலில் இடம் பெறுகின்றன. மாதவையா போன்றே இவரும் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில்

Scanned by CamScanner

நாவல்களைப் படைத்து உள்ளார். இவரது தேசபக்தன் கந்தன், முருகன் ஓர் உழவன் ஆகிய இருபடைப்புகளும் குறிக்கத் தகுந்தவை.

**கல்கி**

தமிழில் வரலாற்று வகை நாவல்களுக்கு வித்திட்டவர். இவரது 'பொன்னியின் செல்வன்' தமிழ் வரலாற்று நாவல்களில் ஒரு மைல் கல்லாகத் திகழ்கின்றது. பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம், தியாகபூமி ஆகிய நாவல்களும் குறிக்கத் தகுந்தவை ஆகும். அலை யோசை நாவல் விடுதலைப் போரை மையமிட்டது. விறுவிறுப்பான நடை, மெல்லிய நகைச்சுவை, விவரிப்பு நுட்பம் போன்றவை கல்கி நாவல்களின் தனிச்சிறப்புகளாகும். நாவல் வாசிப்பதில் ஒரு பரந்துபட்ட வாசகர் கூட்டத்தினை உருவாக்கிய பெருமை இவரையே சாரும். கல்கி தமிழகத்தின் 'வால்டர் ஸ்காட்' என்றும் 'வரலாற்றுப் பேராசான்' என்றும் போற்றப்படுகின்றார்.

**அகிலன்**

இயற்பெயர் அகிலாண்டம். வானொலியில் நிகழ்ச்சித் தயாரிப்பாள ராகப் பணிபுரிந்தவர். சமூக, வரலாற்றுவகை நாவல்களை ஒரு சேரப் படைத்து வெற்றி கண்டவர். **தமிழின் முதல் ஞானபீட விருதினைப் பெற்றுத் தந்த நாவலாசிரியர்.** இவரது நாவல்களில் 'சித்திரப்பாவை' குறிக்கத் தகுந்தது. 'பால்மரக் காட்டினிலே' எனும் நாவல் மலேசியாவில் வாழும் தமிழர்களது வாழ்வியல் போராட்டங்களையும், இரப்பர்த் தோட்டங்களில் அவர்களுக்கு ஏற்படும் அவலங்களையும் விவரிக்கிறது. கயல்விழி, வெற்றித்திருநகர், வேங்கையின் மைந்தன் ஆகிய வரலாற்று நாவல்கள் குறிக்கத் தகுந்தவை.

**நா. பார்த்தசாரதி**

தீபம் எனும் பத்திரிகையின் ஆசிரியராக விளங்கியவர். பல சமூக, வரலாற்று நாவல்களைச் சிறப்பாகப் படைத்துள்ளார். பாண்டிமாதேவி, மணி பல்லவம் என்னும் இரு வரலாற்று நாவல்களும், பொன் விலங்கு, சமுதாயவீதி, குறிஞ்சி மலர் ஆகிய சமூக நாவல்களும் குறிக்கத் தகுந்தவை. குறிஞ்சிமலர் தொலைக்காட்சித் தொடராகவும் வெளி வந்துள்ளது.

**மு. வரதராசனார்**

நாவல் இலக்கியத்தில் ஆழ்ந்து ஈடுபட்ட ஒரே தமிழ்ப் பேராசிரியர் எனும் பெருமைக்கு உரியவர். எழுத்தில் அறக்கோட்பாடுகளை

Scanned by CamScanner

வலியுறுத்தியவர். இவரது நாவல்களில் பாவை, கரித்துண்டு, அகல் விளக்கு, கயமை போன்றவை மிகப் புகழ்பெற்றவை.

இவரது நாவல்களில் காந்தியத் தாக்கம் செறிவாக வெளிப் பட்டுள்ளது. மராத்தி நாவலாசிரியர் காண்டேகருடன் இவரது படைப்புகள் ஒப்பு நோக்கத் தக்கவை.

### தி. ஜானகிராமன்

கும்பகோணத்தில் பிறந்து புது தில்லியில் பல காலம் வசித்தவர். வானொலியில் நிகழ்ச்சி அமைப்பாளராகப் பணிபுரிந்தவர். 'தமிழ்ப் புனை கதைகளை' உலகத்தரத்திற்குக் கொண்டு சென்றவர். இவரது கதையில் தஞ்சை மண்ணின் வட்டார மணம் வீசும். நகைச்சுவை கலந்த நுட்பமான விவரிப்பு நடை இவருடையது.

தி.ஜா.வின் நாவல்களில் அம்மா வந்தாள், மோகமுள் ஆகிய இரண்டும் அதிகம் பேசப்பட்டன. அமிர்தம், மரப்பசு போன்ற அளவிலும், தரத்திலும் கனமான நாவல்களைத் தந்துள்ளார்.

### லா.ச. ராமாமிருதம்

லா.ச.ரா. என அழைக்கப்பட்ட லால்குடி ச.ராமாமிருதம் பரவசமும் கவித்துவமும் கலந்த ஒரு தமிழ் நடைக்குச் சொந்தக்காரர். மனித மனத்தின் எண்ண ஓட்டங்களை அப்படியே தமது படைப்புகளில் பிரதிபலித்துள்ளார். அபிதா, புற்று, பாற்கடல் ஆகிய நாவல்கள் குறிக்கத் தகுந்தவை. இவர் 'சிந்தா நதி' எனும் கட்டுரைத் தொகுப்பிற்காக சாகித்ய அகாதெமி விருது பெற்றார்.

### சுந்தரராமசாமி

சிறுகதை, நாவல், புதுக்கவிதை, மொழி பெயர்ப்பு எனப் பல துறைகளிலும் தமது முத்திரையைப் பதித்தவர். ஒரு புளியமரத்தின் கதை, ஜே.ஜே. சில குறிப்புகள், குழந்தைகள் பெண்கள் ஆண்கள் என மூன்று வேறுபட்ட நாவல்களைப் படைத்தவர். கனடா நாட்டின் 'இயல்' விருதினைப் பெற்ற முதல் தமிழ் நாவலாசிரியர் எனும் பெருமை இவருக்கு உண்டு. மலையாள மொழியிலிருந்து தகழி சிவசங்கர பிள்ளையின் செம்மீன் நாவலைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். தமது வாழ்வின் இறுதி நாட்களினை அமெரிக்காவில் கழித்து அண்மையில் மறைந்தார்.

Scanned by CamScanner

**ஜெயகாந்தன்**

இவரைப் புதுமைப் பித்தனின் எழுத்துலக வாரிசு எனலாம். முற்போக்குச் சிந்தனையும், சமூக அவலங்களைச் சாடும் போக்கும் இவரது படைப்புகளில் இணைந்து காணப்படுகின்றன. இவரது நாவல்களில் ரிஷிமூலம், சில நேரங்களில் சில மனிதர்கள், சினிமாவுக்குப் போன சித்தாளு போன்றவை குறிக்கத் தக்கவை. இவர் எழுதிய அக்கினிப் பிரவேசம் எனும் சிறுகதையே பின்னர் சில நேரங்களில் சில மனிதர்களாகவும், கங்கை எங்கே போகிறாள் எனும் நாவல்களாக உருப்பெற்றன. தமிழில் அகிலனுக்குப் பிறகு ஞானபீட விருதினைப் பெற்ற ஒரே நாவலாசிரியர். பாரதியின் வாழ்வு குறித்த அரிய நூல் எழுதும் இலட்சியத்துடன் தற்பொழுது புதுவையில் வசித்து வருகிறார்.

**நீலபத்மநாபன்**

தலைமுறைகள், பள்ளிகொண்டபுரம், தேரோடும் வீதி என மூன்று மிகப்பெரிய நாவல்களைத் தந்தவர். திருவனந்தபுரத்தில் பல்லாண்டுகளாக வசித்துவரும் இவர் கேரள அரசின் மின்வாரியத் துறையில் பொறியாளராகப் பணிபுரிந்தவர். திருவனந்தபுரம் நகரத்தினைத் தமது படைப்புகளில் உயிரோட்டமாகப் படைத்துள்ளார். கவிதை, மொழிபெயர்ப்பு போன்ற துறைகளிலும் ஈடுபட்டு வருபவர்.

**சு. சமுத்திரம்**

வானொலி, தொலைக்காட்சித் துறைகளில் உயர் அலுவலராகப் பணிபுரிந்தவர். முற்போக்கு, சமூகச் சாடல் ஆகிய இரண்டும் இவரது படைப்பின் பிரிக்க முடியாத இரு கூறுகள். ஒரு கோட்டுக்கு வெளியே ஊருக்குள் ஒரு புரட்சி சத்திய ஆவேசம் போன்ற சிறந்த நாவல்களைப் படைத்தவர். சாகித்திய அகாதெமி விருது பெற்ற சிறப்புக்குரியவர். ஒரு கார் விபத்தில் இவர் உயிர் துறந்தது தமிழ் நாவல் உலகிற்கு ஒரு பேரிழப்பு.

**அசோகமித்திரன்**

எழுத்தையே முழுநேரப் பணியாகக் கொண்டு வாழ்பவர். இருவர், 18ஆவது அட்சக்கோடு, விடுதலை போன்ற சிறந்த நாவல்களைப் படைத்து உள்ளார். இவரது எழுத்தில் அங்கதச் சுவை மிளிரும். தாம் இளமையில் வாழ்ந்த ஹைதராபாத் நகரினைத் தமது படைப்புகளில் உயிருடன் சித்தரித்துள்ளார்.

Scanned by CamScanner

**சுஜாதா**

திருவரங்கத்தில் பிறந்து பெங்களூர் மற்றும் சென்னை நகரங்களில் வசித்து வருபவர். தமிழில் துப்பறியும் தொடர் நாவல்கள் மற்றும் அறிவியல் வகை நாவல்களுக்கு வித்திட்டவர். தமிழை நவீனப்படுத்தி வரும் இலக்கியவாதி. நகைச்சுவையும், விறு விறுப்பும் இவரது நடையில் இழையோடும். கரை எல்லாம் செண்பகப்பூ, நிலாநிழல் போன்ற தொடர்கதைகளை எழுதியுள்ளார். இவரது என் இனிய இயந்திரம் தமிழில் தோன்றிய சிறந்த அறிவியல் புனைகதை ஆகும்.

**பாலகுமாரன்**

பெண்ணியவாதியாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்பவர். ஐம்பதிற்கும் மேற்பட்ட நாவல்களைப் படைத்துள்ளார். இரும்புக் குதிரை, கரையோர முதலைகள், தாயுமானவன் ஆகியன குறிக்கத் தகுந்த படைப்புகள்.

**பிரபஞ்சன்**

இவரது இயற்பெயர் வைத்தியலிங்கம். தமிழ்ப் புத்திலக்கியங் களை நவீனப்படுத்திவரும் இவர் புதுச்சேரியில் பிறந்தவர். கனவு மெய்ப்படவேண்டும், மானுடம் வெல்லும், வானம் வசப்படும் போன்ற புதினங்கள் இவரது படைப்புப் பெருமையைப் பறைசாற்றுவன. மானுடம் வெல்லும் நாவல் புதுச்சேரி வரலாற்றினை ஆனந்தரங்கம் பிள்ளை என்பவர், பல ஆண்டுகள் தொடர்ச்சியாக எழுதிய நாட் குறிப்பின் துணை கொண்டு விவரிக்கின்றது. சாகித்ய அகாதெமி விருது பெற்ற பிரபஞ்சனின் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகள் இழையோடும்.

**பாவண்ணன்**

புதுச்சேரியில் பிறந்து பெங்களூரில் வசிப்பவர். இவரது கதைகள் எதார்த்தத்தை மையமிட்டவை. சிறுகதை, நாவல், புதுக்கவிதை, மொழி பெயர்ப்பு எனப் பல்துறைகளிலும் மிகத்தீவிரமாக ஈடுபட்டு வருபவர். இவரது நாவல்களில் வாழ்க்கை ஒரு விசாரணை, சிதறல்கள், பாய்மரக் கப்பல் மூன்றும் குறிக்கத் தகுந்தவை.

**பொன்னீலன்**

மார்க்சிய நோக்கில் வர்க்கப் பார்வையோடு நாவல்களைப் படைப்பவர். கரிசல், ஊற்றில் மலர்ந்தது. புதிய தரிசனங்கள், தேடல்

Scanned by CamScanner

ஆகியவை இவரது படைப்பில் மலர்ந்த நாவல்கள். புதிய தரிசனங்கள் சாகித்திய அகாதெமிப் பரிசினைப் பெற்றது.

### தோப்பில் முகமது மீரான்

குமரி மாவட்டம் தேங்காய்ப் பட்டினம் பகுதியைச் சார்ந்தவர். ஒரு கடலோர கிராமத்தின் கதை, துறைமுகம், கடலன் தோப்பு, சாய்வு நாற்காலி போன்ற நாவல்களைப் படைத்தவர். சாய்வு நாற்காலி சாகித்திய அகாதெமி பரிசு பெற்றது. இசுலாமியர் வாழ்க்கை முறைகளை தம் நாவல்களில் நுட்பமாகப் பதிவு செய்து வருபவர்.

### மற்றும் சிலர்

அண்மைக்காலமாகத் தரத்திலும், எண்ணிக்கையிலும் சிறந்த நாவல்களைப் படைத்து வருபவர்களுள் சோலை சுந்தர பெருமாள், ஜெயமோகன், எஸ்.இராமகிருஷ்னன், இரா.முருகன், சோ. தர்மன், இமையம், ச. பாலமுருகன், ஜே.டி.குருஸ், கண்மணி குணசேகரன் போன்றோர் குறிக்கத் தகுந்தனர்.

| | | |
|---|---|---|
| சோலை சுந்தர பெருமாள் | - | செந்நெல், தப்பாட்டம், புதிய நந்தன் |
| ஜெயமோகன் | - | காடு, விஷ்ணுபுரம், கொற்றவை, ஏழாம் உலகம் |
| எஸ்.ராமகிருஷ்னன் | - | உப்பாண்டவம், நெடுங்குருதி, உறுபசி |
| சோ.தர்மன் | - | ஈரம் |
| இரா.முருகன் | - | மூன்றாம் விரல், அரசூர் வம்சம் |
| இமையம் | - | கோவேறு கழுதைகள், ஆறுமுகம், செடல் |
| ச.பாலமுருகன் | - | சோளகர் தொட்டி |
| கண்மணி குணசேகரன் | - | அஞ்சலை |
| ஜே.டி.குருஸ் | - | ஆழிசூழ் உலகு |

போன்றவை அண்மைக்காலத்தில் எழுதப்பட்ட சிறந்த நாவல்கள் எனலாம்.

### தமிழில் வட்டார நாவல்கள்

தமிழில் வட்டார வழக்குகளை அதிகம் பயன்படுத்தி முதன் முதலில் நாவல் இயற்றியவர் என ஆர்.சண்முக சுந்தரத்தினைக் குறிப்பிட லாம். இவரது 'நாகம்மா' போன்ற படைப்புகள் கொங்கு நடையைப் பிரதிபலிப்பன. இவ்வகையில் கரிசல் நடையை விவரிப்பதில் கி.இராஜ

Scanned by CamScanner

நாராயணன் முன்னோடியாகத் திகழ்கின்றார். இவரது கோபல்ல கிராமம், கோபல்லபுரத்து மக்கள் ஆகிய இருநாவல்களும் குறிக்கத் தகுந்தவை.

**குறிக்கத் தகுந்த சில வட்டார வழக்குகளின் நாவலாசிரியர்கள்**

| | | |
|---|---|---|
| கொங்கு | : | ஆர். சண்முக சுந்தரம், பெருமாள் முருகன் |
| கரிசல் | : | கி.ராஜநாராயணன், பொன்னீலன், பூ.மணி |
| திருநெல்வேலி | : | வண்ண நிலவன் |
| தேங்காய் பட்டினம் | : | தோப்பில் முகமது மீரான் |
| தஞ்சை | : | தி.ஜானகிராமன், தஞ்சை பிரகாஷ், எம்.வி.வெங்கட்ராம் |
| சென்னை | : | ஜெயகாந்தன், சுஜாதா |
| புதுவை | : | பிரபஞ்சன், பாவண்ணன் |
| தனித்தமிழ் நடை | : | டாக்டர் மு. வரதராசனார் |
| நாகர்கோவில் | : | சுந்தர ராமசாமி, ஐசக் அருமை ராஜன், ஆ. மாதவன், நீல. பத்மனாபன். |

**தமிழ் நாவல்களில் சில பரிசோதனை முயற்சிகள்**

தமிழ் நாவலாசிரியர்கள் பலர் தங்களது நாவல்களின் உருவ உள்ளடக்கங்களை மாற்றி அவற்றின் கதை கூறும் தன்மையில் பல புதுமைகளைப் புகுத்தியுள்ளனர். அவ்வகையில்

| | | |
|---|---|---|
| நகுலன் | - | நினைவுப்பாதை |
| சாருநிவேதிதா | - | எக்சிஸ் டென்ஷியலிசமும், ஃபேன்சி பனியனும் |
| தமிழவன் | - | ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள் |
| கோணங்கி | - | பாழி |
| ராஜ்கௌதமன் | - | சிலுவைராஜ் சரித்திரம் |
| சல்மா | - | இரண்டாம் ஜாமங்களின் கதை |

போன்றவை தமிழில் பின் நவீனத்துவத்தை மையமாகக் கொண்டு இயற்றப்பட்டவை. இவை பரிசோதனை முயற்சி நாவல்களாகும்.

**நாவல் இலக்கியத்தில் மகளிரது பங்களிப்பு**

நாவல் இலக்கிய வளர்ச்சியில் பெண் எழுத்தாளர்களுக்கும் பெரும் பங்கு உண்டு. அன்றைய வை.மு.கோதை நாயகி அம்மாள் தொடங்கி இன்றைய சு. தமிழ்ச்செல்வி வரை பெண் படைப்பாளிகள் பலர் தோன்றி நாவல் இலக்கியத்தினை வளப்படுத்தி வருகின்றனர்.

Scanned by CamScanner

**வை.மு. கோதைநாயகி**

கதைகளைக் கற்பனையில் படைத்துக் கூறுவதில் தனித்தன்மை வாய்ந்தவர். 115 புதினங்களைப் படைத்தவர். வீரவுசந்தா, மகிழ்ச்சி, உதயம் முதலியவை இவரது குறிக்கத் தகுந்த படைப்புகள்.

**ஹெப்சிபா ஜேசுதாசன்**

ஆங்கிலப் பேராசிரியையாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். புத்தம் வீடு, டாக்டர் செல்லப்பா, அனாதை போன்ற சிறந்த படைப்புகளைப் படைத்தவர்.

**ராஜம்கிருஷ்ணன்**

மனித நேயம், முற்போக்குச் சிந்தனை ஆகிய இரண்டு அம்சங் களும் இவரது படைப்புகளில் இழையோடும். குறிஞ்சித்தேன், வளைக் கரம், அலைவாய்க் கரையில், கரிப்பு மணிகள் போன்றவை இவரது சிறந்த படைப்புகளுக்கு எடுத்துக் காட்டுகள்.

**லட்சுமி**

அடிப்படையில் இவர் ஒரு மருத்துவர். நாவல்களில் மகளிரது பிரச்சினைகளை விவரிப்பதில் வல்லவர். பலராலும் விரும்பிப் படிக்கப் படும் நாலாசிரியை. இவரது படைப்புகளில் காஞ்சனையின் கனவு, பெண்மனம், நாயக்கர் மகள் ஆகியவை குறிப்பிடத் தகுந்தவை.

**வாஸந்தி**

இந்தியா டுடே தமிழ்ப்பதிப்பு இதழில் ஆசிரியராகப் பணி புரிந்தவர். 25க்கும் மேலான நாவல்களைப் படைத்துள்ளார். ஆகாச வீடுகள், மனிதர்கள் பாதி நேரம் தூங்குகிறார்கள், நான் புத்தன் இல்லை போன்றவை குறிக்கத் தகுந்த படைப்புகள்.

**சிவசங்கரி.**

வங்கிப் பணியாளரான இவர் எழுத வேண்டும் என்ற உந்துதலில் எழுத வந்தவர். திரிவேணி சங்கமம், ஏன், 47 நாட்கள் போன்ற இவரது நாவல்கள் வாசகர்களால் பெரிதும் விரும்பிப் படிக்கப் பெற்றவை.

அண்மைக்காலமாக மகளிர்ப் பிரச்சனைகளைத் தீவிரமாக வெளிப்படுத்தும் பெண்ணிய நாவல்களைப் பெண் நாவலாசிரியர்கள் பலரும் படைத்து வருகின்றனர். அவற்றுள்

| | | |
|---|---|---|
| கிருத்திகா | - | விஸ்வேச்வரம் |
| சிவகாமி | - | பழையன கழிதலும் |
| திலகவதி | - | கல்மரம் |

Scanned by CamScanner

| | | |
|---|---|---|
| பாமா | - | சங்கதி, கருக்கு, வன்மம் |
| சு.தமிழ்செல்வி | - | கீதாரி, அளம் , |

போன்றவை சிறந்த நாவல்களாகும்.

## மொழி பெயர்ப்பு நாவல்கள்

பிறமொழிகளில் வெளியான சிறந்த நாவல்களைத் தமிழில் மொழி பெயர்க்கும் பணி காலந்தோறும் நடந்து வந்துள்ளது. அவ்வகையில் மராத்தி மொழியில் விஸ.காண்டேகர் எனும் புகழ்பெற்ற நாவலாசிரியரது படைப்புகளில் 13 நாவல்களை கா.ஸ்ரீ.ஸ்ரீ.என்பவர் தமிழாக்கம் செய்துள்ளார்.

இதே போல் வங்க மொழியிலிருந்து பக்கிம் சந்திரர், சரத் சந்திரர், தாகூர் ஆகியோரது பெரும்பாலான நாவல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவற்றை த.நா.குமாரசுவாமி, த.நா. சேனாபதி, கு.கி. ஜயராமன் முதலானோர் மொழி பெயர்த்துள்ளனர்.

இந்தி மொழியிலிருந்து பிரோம் சந்த். என்பவருடைய 'கோதான்' நாவல் தமிழாக்கம் பெற்றுள்ளது. சரஸ்வதி ராம்னாத், சௌரி போன்றோர் இந்தி மொழியிலிருந்து மொழி பெயர்ப்புகளைச் செய்து வருகின்றனர்.

திராவிட மொழிகளில் கன்னட, மலையாள நாவல்களே அதிகம் தமிழாக்கம் பெற்றுள்ளன. கன்னடத்திலிருந்து சிவராம காரந்த் என்பவருடைய மூன்று நாவல்களை டி.பி.சித்தலிங்கையா தமிழாக்கம் செய்துள்ளார். யு.ஆர். அனந்த மூர்த்தியின் 'சம்ஸ்காரா' எனும் நாவலை தி.சு. சதர்சிவம் என்பவர் மொழி பெயர்த்துள்ளார்.

மலையாள மொழியிலிருந்து தகழி சிவசங்கரம் பிள்ளை வைக்கம் முகமது பஷீர், கேசவதேவ் ஆகிய நாவலாசிரியர்களது பெரும்பாலான படைப்புகள் தமிழாக்கம் பெற்றுள்ளன. சி.ஏ.பாலன், குறிஞ்சி வேலன், நீலபத்மனாபன், சுந்தரராமசாமி போன்றோர் இம்மொழி பெயர்ப்புகளைச் செய்துள்ளனர். அண்மைக்காலமாக சு.ரா. என்பவர் மலையாள நாவல்களைத் தமிழாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

தெலுங்கு மொழியிலிருந்து அதிகளவு நாவல்கள் தமிழாக்கம் பெறவில்லை. சுசீலா கனதுர்கா என்பவர் எண்டமூர் வீரேந்திரநாத் என்பவரது துப்பறியும், மாயாவாத நாவல்களைத் தமிழாக்கம் செய்துள்ளார்.

பிறமொழி நாவல்கள் தமிழாக்கம் பெற்ற அளவிற்கு நம் தமிழின் சிறந்த நாவல்கள் பிற மொழிகளில் பெயர்க்கப்படவில்லை என்றே கூறவேண்டும்.

Scanned by CamScanner

**இதழ்களின் பணி**

தமிழ்நாவல் வளர்ச்சிக்குத் தொடக்க காலம் முதல் இதழ்கள் பெரும் பங்காற்றி வருகின்றன. இன்று தொடர்கதைகளும், சிறுகதைகளும் வெளிவராத தமிழ் இதழ்களே இல்லை எனலாம்.

இவ்வாறு வெளிவரும் தொடர் நாவல்களே வாசகர்களிடையே நாவல் வாசிக்கும் பழக்கத்தைத் தூண்டுகின்றன என்றால் அது மிகை யன்று. கல்கி, சாண்டில்யன் போன்றோரது வரலாற்று நாவல்களும், சுஜாதா, புஷ்பாதங்கதுரை, ராஜேஷ்குமார் போன்றோரது துப்பறியும் நாவல்களும் இதழ்களில் தொடர்களாக வெளி வந்து பல இலட்சக் கணக்கான வாசகர்களால் ஆர்வத்துடன் படிக்கப்பெற்றன. இவர்களது தொடர்கள் வெளிவரும் காலங்களில் இதழ்களின் விற்பனை அதிகரித்து விடுவதைப் புள்ளி விவரங்கள் பறை சாற்றுகின்றன. ஆனந்த விகடன், கல்கி, குமுதம் போன்ற முன்னணி இதழ்கள் நாவல்களுக்கான பரிசுப் போட்டிகள் வைத்து, அவற்றை அவ்வப்போது தொடர்களாகவும் வெளியிடுகின்றன. இவையன்றி மாதம் ஒரு நாவல் என்ற வெளியீட்டை யும் இதழ்கள் மேற்கொண்டன. மாலைமதி, இராணிமுத்து, குங்குமச் சிமிழ் போன்ற மாத இதழ்கள் அத்தகையன.

தமிழில் நாவல் இலக்கியம் தோன்றி சுமார்140 ஆண்டுகள் கடந்துவிட்டன. இந்த மிகப்பெரிய காலவெளியில் தமிழ் நாவல்கள் அவற்றின் நோக்கிலும், போக்கிலும் எத்தனையோ மாறுதல்களைப் பெற்றுவிட்டன.

**தொடக்க கால நாவலாசிரியர்கள்**

1. ஒரு கதையினைக் குழப்பமில்லாமல் சொல்வது.
2. ஒரு நீதிபோதனையோடு முடிப்பது எனும் இரு அம்சங் களையே மேற்கொண்டனர். ஆனால் இன்றைய தமிழ நாவலாசிரியர்கள் பல புதிய உத்திகளைத் தமது படைப்புகளில் கையாண்டு வருகின்றனர்.

**இன்றைய தமிழ் நாவல்களில்**

1. நனவோடை உத்தி (எண்ணங்களை அப்படியே சித்திரிப்பது)
2. நாட்குறிப்பு வடிவ உத்தி
3. கடித நடை உத்தி
4. பாத்திரங்களே கதையை விவரிக்கும் உத்தி

Scanned by CamScanner

5. ஆசிரியரே கதாபாத்திரமாகிக் கதையை விவரிக்கும் உத்தி போன்ற உத்திகள் பின்பற்றப்படுகின்றன. ஆங்கிலத்தில் கூறப்படும் 'இசம்' அல்லது கோட்பாட்டுப் பின்னணியில் நாவல்கள் படைக்கப்படுகின்றன. அவ்வகையில்,

காந்தியம், மார்க்கசியம், பெண்ணியம், தலித்தியம் ஆகிய நான்கு கோட்பாடுகளும் தமிழ் நாவல்களின் உருவ உள்ளடக்கங்களில் பெரிதும் பாதிப்புகளை ஏற்படுத்தி வந்துள்ளன.

உலகத்தரம் வாய்ந்த நூற்றுக்கணக்கான பல நாவல்கள் தம்மொழியில் இதுவரை படைக்கப்பட்டுள்ளது தமிழர்கள் பெருமைக் கொள்ளத் தக்க ஒன்றாகும்.

## தமிழின் தலைசிறந்த நாவல்கள்

1. மாயூரம் ச.வேதநாயகம் பிள்ளை - பிரதாப முதலியார் சரித்திரம்
2. ராஜமய்யர் - கமலாம்பாள் சரித்திரம்
3. மாதவையா - பத்மாவதிசரித்திரம்
4. கா.சி.வேங்கடராமன் - தேசபக்தன் கந்தன் (முதல் காந்திய நாவல்)
5. ஆர்.சண்முக சுந்தரம் - நாகம்மாள்
6. க.நா.சுப்ரமணியம் - பொய்த்தேவு
7. கல்கி - அலைஓசை
8. சிதம்பர ரகுநாதன் - பஞ்சும் பசியும்
9. அகிலன் - சித்திரப்பாவை (ஞானபீடவிருது பெற்ற நாவல்)
10. சி.சு. செல்லப்பா - வாடிவாசல்
11. தி. ஜானகிராமன் - மோகமுள்
12. ஹெப்சிபா ஜேசுதாசன் - புத்தம் வீடு
13. லா.ச. ராமாமிருதம் - அபிதா
14. சா. கந்தசாமி - சாயாவனம், விசாரணைக்கமிஷன்
15. நீல. பத்மநாபன் - பள்ளி கொண்டபுரம்
16. ஜெயகாந்தன் - சிலநேரங்களில் சில மனிதர்கள்
17. ஜி. நாகராஜன் - நாளை மற்றுமொரு நாளே
18. கு. சின்னப்ப பாரதி - சங்கம், சர்க்கரை, தாகம்
19. இந்திரா பார்த்தசாரதி - குருதிப்புனல்
20. கி. ராஜநாராயணன் - கோபல்ல கிராமம்
21. அசோகமித்திரன் - பதினெட்டாவது அட்சக்கோடு
22. ஆதவன் - காகித மலர்கள்
23. வண்ண நிலவன் - கடல்புரத்தில்

Scanned by CamScanner

| | | | |
|---|---|---|---|
| 24. | ராஜம் கிருஷ்ணன் | - | அலைவாய் கரையில் |
| 25. | பூமணி | - | பிறகு |
| 26. | ஆ.மாதவன் | - | புனலும் மணலும், கிருஷ்ணப் பருந்து. |
| 27. | சுந்தர ராமசாமி | - | ஜே.ஜே.சில குறிப்புகள் |
| 28. | சு.சமுத்திரம் | - | சோற்றுப்பட்டாளம், ஒரு கோட்டுக்கு வெளியே |
| 29. | பாலகுமாரன் | - | தாயுமானவன் |
| 30. | சுப்ரபாரதிமணியன் | - | மற்றும் சிலர் |
| 31. | சுஜாதா | - | என் இனிய இயந்திரா |
| 32. | பிரபஞ்சன் | - | வானம் வசப்படும் |
| 33. | பாவண்ணன் | - | வாழ்க்கை ஒரு விசாரனை |
| 34. | மாலன் | - | ஜனகனமண |
| 35. | நாஞ்சில் நாடன் | - | தலைகீழ் விகிதங்கள், என்பிலதனை வெயில் காயும், எட்டுத்திக்கும் மதயானை |
| 36. | சிவகாமி | - | பழையன கழிதலும், ஆனந்தாயி |
| 37. | திலகவதி | - | கல்மரம் |
| 38. | ஜெயமோகன் | - | ரப்பர், விஷ்ணுபுரம், ஏழாம் உலகம், கொற்றவை |
| 39. | எஸ்.ராமகிருஷ்ணன் | - | உபபாண்டவம், உறுபசி, நெடுங்குருதி |
| 40. | சு.தமிழ்ச்செல்வி | - | கீதாரி, மாணிக்கம், அளம், கற்றாழை. |
| 41. | சோ.தர்மன் | - | தூர்வை, கூகை |
| 42. | தனுஷ்கோடிராமசாமி | - | தோழர் |
| 43. | தேனி சீருடையான் | - | கடை |
| 44. | இமையம் | - | கோவேறு கழுதைகள் |
| 45. | கோபாலகிருஷ்ணன் | - | அம்மன் நெசவு, மனல்கடிகை |
| 46. | கிருஷ்ணமூர்த்தி | - | புலி நகக் கொன்றை |
| 47. | சுமதி | - | கல் மண்டபம் |
| 48. | ச. பாலமுருகன் | - | சோளகர்தொட்டி |
| 49. | சி.ஆர்.ரவீந்திரன் | - | மஞ்சுவெளி, மணியபேரா |
| 50 | செந்தூரம் ஜெகதீஷ் | - | கிடங்குத்தெரு |
| 51. | கோணங்கி | - | பாழி |

Scanned by CamScanner

29

## தமிழில் புதுக்கவிதை

'பாட்டினைப்போல ஆச்சரியம் பாரின் மிசை இல்லையடா' என்றும் 'ஆசை தருங்கோடி அதிசயங்கள் கண்டதிலே ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமடா' என்றும் கவிதை இன்பத்தைப் போற்றிப் புகழ்கின்றான் பாரதி. பதினெட்டாம் நூற்றாண்டு வரை இலக்கியம் என்றாலே கவிதை ஒன்றுதான் என்று கூறுமளவிற்குத் தமிழ் இலக்கிய வரலாற்றில் நீண்ட இடத்தைப் பிடித்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ்க் கவிதையிலும் ஒரு மலர்ச்சி ஏற்பட்டது. பின்னர் பாரதியின் வருகைக்குப்பின் கவிதை இலக்கியம் புதிய எழுச்சியையும் வேகத்தையும் கண்டது. சமயத்தையும் தனிமனிதனையும் சார்ந்து நின்ற தமிழ்க்கவிதையைச் சமுதாயத்தின் எல்லாப்பகுதிகளுக்கும் உரிமை யாக்கிப் பொதுவாக்கியவன் பாரதி.

பாரதியார் - கவிதை எழுச்சி புதிய புதிய கருத்துக்களும், வடிவங் களும், தமிழ்ப்பற்றும், தேசப்பற்றும், சீர்திருத்த வேகமும், பெண்மையின் எழுச்சியும், புரட்சிகரமான கொள்கைகளும், எளிமையும் இன்றைய தமிழ்க்கவிதையின் இயல்புகளாக விளங்குவதற்குப் பாரதியின் பங்களிப்பு அதிகம். பாரதியின் கவிதைகள் யாவும் கவிதை உலகில் இன்று தனித்துவத்தோடு பேசப்படும் புதுக்கவிதைக்கும் வசனக் கவிதைக்கும் வழிகாட்டியாய்த் திகழ்கின்றன.

மேல்நாட்டார் கவிதைத் தாக்கம் பாரதியினுடைய புதுமை மட்டு மின்றி மேல்நாட்டாரின் கவிதைத்தாக்கமும் புதுக்கவிதை வளர்ச்சிக்கு ஒரு முக்கிய காரமணாக விளங்குகின்றது. வால்ட்விட்மன் மற்றும் அவருடைய சார்பாளர்கள் புதுக்கவிதை இயக்கத்திற்குப் பெரும் ஆதரவு தந்தார்கள். 'இலகு கவிதை இயக்கம்' என்பது -எளிதாகப் பாடுவது எனப் பொருள்படும். இந்த இயக்கம் 'எஸ்ராப்ரவுன்' முதலியோரைக் கவர்ந்தது. அதனால் புதுக்கவிதை இன்னும் வேகமாகக் காலூன்றியது.

Scanned by CamScanner

"மரபெனும் பழமைக் காட்டை
ஒன்றாகவே அழிப்போம்"

என்ற சொற்கள் தமிழ்க்கவிதைக்குப் புதிய வேகத்தைக் கொடுத்தன.

## தமிழில் புதுக்கவிதை

பாரதியின் கவிதைப் போக்கும் மேல் நாட்டாரின் தாக்கமும் தமிழ்க் கவிஞர்களிடையே பாதிப்பை ஏற்படுத்தியது. இதன் காரணமாகப் புதுக்கவிதையினை விரும்பி எழுதத் தொடங்கினர். கவிதை என்றால் புதுக்கவிதை என்று சொல்லும் அளவிற்கு இலக்கிய வரலாற்றில் நிலையான இடத்தைப் பெற்றது. படித்தவர்கள் முதல் பாமரர்கள் வரை புதுக்கவிதையைப் படிக்கவும், படைக்கவும் முயன்று வருகின்றனர்.

புதுக்கவிதை இலக்கணம் கவிதை என்ற சொல்லின் வரையறையில் இருந்து புதுக்கவிதைக்கு வழங்கப்படும் வரையறைகள் மாறுபட்டு அமைகின்றன.

"எண்ணத்தை அதன் பிறப்பிடத்திலேயே பிடித்து விடுவது" புதுக் கவிதை என ஒருவர் வரையறை தருகின்றார். கவிக்கோ அப்துல் ரகுமான் கூறும்போது புதுக்கவிதையின் கருத்து வெளிப்பாடு மின்னல் போன்றது. மரபுக்கவிதை கருத்தைச் சுற்றி வளைத்துச் சொல்வது "புதுக்கவிதை நேரடியாகக் கருத்தைச் சொல்வது" என்கிறார்.

"யாப்புடைத்த கவிதை
அணையுடைத்த காவிரி
முகிலுடைத்து மாமழை
முரட்டுத் தோலுரித்த
பலாச்சுளை"

எனப் புதுக்கவிதைக்கு விளக்கம் தரப்படுகிறது. வைரமுத்து குறிப்பிடும் பொழுது. "புதுக்கவிதை எனும் போர்வாள் இலக்கண உறையில் இருந்து கவனமாகவே கழற்றப்படுகிறது" என்கிறார். சார்வகன் என்ற கவிஞர் புதுக்கவிதை குறித்துப் பேசும் பொழுது.

"யாப்பற்ற கவிதை
அருவருக்கும் அலியல்ல
வறட்டுக் கோஷா எறிந்த மங்கை
மார்கழியின் மொட்டிரவில்
தென்றல் தரும் சூடு போக்கி
வெண்ணிலாவின் பயன் துய்க்க
உடை களைந்த ஒரு தலைவி"

Scanned by CamScanner

எனக் கூறுகின்றார். இவ்வாறு புதிய வரையறைகளுக்கு உட்பட்ட புதுக் கவிதையின் வளர்ச்சி மூன்று காலகட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது.

**மூன்று காலகட்டம் (இயக்கம்)**

புதுக்கவிதையின் இன்றைய இமாலய வளர்ச்சிக்கு மணிக்கொடி, எழுத்து, வானம்பாடி ஆகிய மூன்று இயக்கங்களின் பங்களிப்பு உன்னத மானது. இவ்வியக்கங்களைச் சார்ந்த கவிஞர்கள் தங்களின் சிந்தனை களைப் பதிவு செய்ய இதழ்களைப் பயன்படுத்தி ஏற்றம் பெற்றனர்.

**மணிக்கொடிகாலம் (1930 முதல் 1945 வரை)**

மணிக்கொடி காலத்தில் மேல்நாட்டுக் கவிதைத் தாக்கத்தால் உரைநடைக் கவிதைகள் தோன்றின. இலகு கவிதை என்ற பெயரில் யாப்பற்ற கவிதை உலகை வலம் வந்தது. வால்ட்விட்மனின் வசன கவிதைகள் தமிழ்க் கவிஞர்களின் பார்வைக்கு உட்பட்டது. இதனைப் பின்பற்றி ந.பிச்சமூர்த்தி வசன கவிதையில் சோதனை முயற்சிகளையும் புதுக்கவிதையில் பல சொல்லாக்கங்களையும் உருவாக்கினார். மணிக்கொடி காலக் கவிஞர்களுள் முதன்மையானவர் புதுமைப்பித்தன். சூழ்நிலைக்கு ஏற்ப கேலியும், கிண்டலுமாகக் கவிதை எழுதிப் புதுமை படைத்தார்.

**"பண் என்பார் பாவம் என்பார்**
**பண் மரபு என்றிடுவர்**
**கண்ணைச் செருகி**
**கவி என்பார் அண்ணாந்து**
**கொட்டாவி விட்டதெல்லாம்**
**கூறுதமிழ் பாட்டாச்சே**
**முட்டாளே இன்னுமா பாட்டு"**

என்று கவிதையினை எள்ளல் செய்கின்றார் புதுமைப்பித்தன். கு.ப. ராஜகோபாலன், வல்லிக்கண்ணன், தூரன், தொ.மு.சிதம்பர ரகுநாதன் போன்ற கவிஞர்களும் மணிக்கொடியில் புதுக்கவிதை எழுதி வளர்த்தவர்கள் ஆவர்.

**எழுத்து வட்டத்தினர் காலம் (1950க்குப் பிறகு)**

எழுத்து எனும் இதழின் வழி புதுக்கவிதை படைத்தவர்கள் பலர். சி.சு.செல்லப்பா இவ்விதழின் ஆசிரியராக விளங்கினார். இவ்விதழில் இடம் பெற்ற புதுக்கவிதைகளின் கருவாகப் பாலியல் சிதைவு,

Scanned by CamScanner

மனமுறிவு, துக்கம், நிராசை போன்றவை அமைந்தன. மனிதனுடைய விருப்பு வெறுப்புகள் புதுக்கவிதையில் அதிகம் வெளிப்படுத்தப் பட்டன. சக்திக்கனல் இக்கால புதுக்கவிதைகளைப் பற்றிக் கூறும் பொழுது புதுக்கவிதைகள் அல்ல புதிர்க் கவிதைகள் என்கிறார். இக்காலக் கட்டக் கவிதைகளில் உருவமும், உள்ளடக்கமும் தமிழறிஞர்களுக்குப் புறம்பானதாகத் தோன்றின.

தமிழவன் எனும் திறனாய்வாளர் எழுத்து இயக்கம் பற்றிக் குறிப்பிடும்பொழுது 'எழுத்து இயக்கம் உதிர்ந்து விழுந்து சருகாகிவிட்டது என்பதை உணர்த்தும் நிலையில் இக்காலக் கவிதைகளில் இடம் பெற்ற இருண்மைப்பண்பு, கனவு நிலை போன்ற மிகுதி, இப்போக்கு டி.எஸ். எலியட் என்ற கவிஞருக்கு வேட்டி, சட்டை அணிவிப்பது போன்றது' என்கிறார். படைப்புத் துறைகளில் தமிழ்க் கவிஞர்கள் மேல்நாட்டுக் கவிஞர்களைப் பின்பற்றி அமைத்த படிமம், குறியீடு, இருண்மை போன்ற பண்பு புதுக்கவிதையின் நோக்கைத் தடைசெய்கின்றன என்கிறார்.

வானம்பாடி இயக்கம் (1970க்குப்பிறகு...) வானம்பாடி எனும் இதழ் புதுக்கவிதை வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்திருக்கிறது. இவ்விதழில் எழுதிய புதுக்கவிஞர்கள் சமுதாயத்தை உற்று நோக்கிப் படைப்புகளைத் தந்தனர். வானம்பாடி இயக்கம் பற்றிக் கைலாசபதி குறிப்பிடும் பொழுது: எதிர்கால நம்பிக்கை, கொள்கைத் தெளிவு, தேசப் பற்று, நேர்மை, தமிழ் மரபுணர்ச்சி, எளிமை, பொறுப்புணர்ச்சி, சமுதாய நேயம், கூட்டுறவு மனோபாவம் முதலியன மூன்றாவது காலக்கட்டக் கவிஞர்களிடத்தில் காணப்படுகின்றன எனத் துணிந்து கூறலாம் என்கிறார்.

மௌனத்தின் நாவுகள் என்ற கவிதைத் தொகுதியின் முன்னுரையில் அப்துல் ரகுமான், 'இவைகள் அசலாக இருப்பதற்கு காரணம் இவைகள் கருவறையில் இருந்து வந்திருக்கின்றன. ஒப்பனை அறையில் இருந்து அல்ல. இவை பாதையை உண்டாக்கும் பாதங்கள். எனவே எந்த பழைய பாதையின் புழுதியும் இவற்றை அழுக்காக்கவில்லை' என வானம்பாடிக் கவிஞர்களையும், கவிதைகளையும் சிறப்பித்துக் கூறுகின்றார்.

புதிய வேகத்தோடும், எழுச்சியோடும் செயல்பட்டுவந்த வானம் பாடி இயக்கம் சிறு சிறு குழுவாகப் பிரிந்தது. வேள்வி, துளிகள், பூ போன்ற இதழ்களின் வழி வானம்பாடிக் கவிஞர்கள் கவிதைகளைப் படைக்கலாயினர். புதுக்கவிதை உலகில் இன்றும் பேசப்பட்டு வரும் புகழ்மிக்கப் புதுக்கவிஞர்கள் பலர் வானம்பாடியில் உருவானவர்கள் என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

Scanned by CamScanner

## புதுக்கவிதையின் தேவை

வளமான மரபுக்கவிதைகள் இருக்க புதுக்கவிதை என்ற புதிய முறை தமிழுக்குத் தேவையில்லை என்று கூறிய கவிஞர் பலரும் புதுக் கவிதையின் தேவையை உணர்ந்து கவிதைகளைத் தந்தனர். புதுக் கவிதையைப் புறக்கணித்துவிட்டு இன்றைய தமிழ்க் கவிதை உலகைக் காண்பது இயலாத நிலை என்பதை உணர்ந்தார்கள். புதுக்கவிதையின் தேவையைக் கூற விரும்பும் அப்துல்ரகுமான் அன்னம் (1971) இதழில் பின்வரும் கருத்துக்களைப் பதிவு செய்கின்றார்.

- சொற்களை ஆயுதங்களாகக் கையாளும் பக்குவம்
- பழைய யாப்பில் உள்ளதைவிட அர்த்தமுடைய சந்த நுட்பம்
- சுண்டக்காய்ச்சி கடைசி நிலைக்குக் கெட்டிப்படுத்தும் வடிவ அமைப்பு.
- உள்ளடக்கமே வார்ந்து அமையும் உத்தி, புதுமை
- இவை எல்லாவற்றையும் விட புதிய பார்வை, புதிய உள்ளடக்கம்

போன்றவற்றைப் புதுக்கவிதையின் தேவைகளாகக் குறிப்பிடுகின்றனார்.

## புதுக்கவிதையில் உத்திகள்

- படிமம்
- குறியீடு
- இருண்மை
- தொன்மம்

போல்வன இன்றைய புதுக்கவிதைகளின் உத்திகளாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன. சில நேரங்களில் கவிதையைப் புரியாத் தன்மைக்கு உட் படுத்தி வருகின்றன. புதுக்கவிதையின் நோக்கை இலக்கை இவ்வுத்திகள் தடுத்து விடுவதும் புரியாமல் எழுதுவதே புதுக்கவிதை என்ற நினைப் போடு புதுக்கவிதைகளைத் தருவதும் ஏமாற்றத்தைத் தருகிறது.

## புதுக்கவிதையின் போக்குகள்

வானமாமலை என்பவர் புதுக்கவிதையின் போக்குகளை வகைப் படுத்திக் கூறுகின்றார்.

- வாழ்க்கை
- சாவு
- இணைவிழை உணர்ச்சி
- நிராசை
- தனிமனிதம்

Scanned by CamScanner

- கவிஞன் தொழில்
- எழுத்தாளன் தொழில்
- படிமம்
- குறியீடு
- உணர்ச்சி

போன்றவை புதுக்கவிதையின் போக்குகளாகச் சுட்டப்பட்டாலும் இன்று இவையனைத்தும் கடந்து எல்லாவற்றையும் புதுக்கவிதையால் சொல்ல முடியும் என்ற நிலை உருவாகி இருக்கிறது.

**புதுக்கவிஞர்கள்**

புதுக்கவிஞர்கள் அதிகமாகவே கவிதைகளைத் தந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் அவை நிறைவான கவிதைகளாக இருக்கின்றனவா? என்பது சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். இன்றைய இதழ்களும் புற்றீசல் போல் புதுக்கவிதைகளை வெளியிட்டு வருகின்றன. காதலும் சோகமும் தவிர வேறு நோக்கு இக்கவிதைகளில் இல்லை என்பது வருத்தத்திற்குரியது. புதுக்கவிதையை வளர்த்து வார்த்த தரமான புதுக்கவிஞர்களின் பணியினையும், படைப்பினையும் குறிப்பிடுவது பொருத்தமாக அமையும்.

**ந.பிச்சமூர்த்தி**

புதுக்கவிதை இயக்கத்தின் விடிவெள்ளி, முதல் முயற்சியாளர். வசன கவிதை, புதுக்கவிதை இரண்டிலும் வல்லவர். தத்துவக் கவிஞராகவும் அடையாளப்படுத்தப்படுபவர். புற உலக அவலங்கள் மனிதனைப் புண்படுத்துவது கண்டு பொங்கி, தன் உள்ளாற்றலை வளர்த்து அதனை வென்று மனிதன் மேலோங்க வேண்டும் என்ற வேட்கையை உடையவர்.

"வாழ்க்கைப் போர்!
முண்டி மோதும் துணிவே இன்பம்
உயிரின் முயற்சியே வாழ்வின் மலர்ச்சி
ஜீவா! விழியை உயர்த்து
சூழ்வின் இருள் என்ன செய்யும்?
கழுகு பெற்ற வெற்றி நமக்கும் கூடும்"

என்பன போன்ற கவிதைகள் இவருடையன. பிச்சமூர்த்தி கவிதைகளில் கிளிக்குஞ்சு, பூக்காரி, வழித்துணை, கிளிக்கூண்டு போன்ற படைப்புகள் சிறந்தன.

Scanned by CamScanner

கு.ப. ராஜகோபாலன்

வசன கவிதையில் புதுக்கவிதையின் வேகத்தைப் பாய்ச்சியவர். ஆண், பெண் உணர்வுகளைப் புதுமையான முறையில் உளவியல் விமர்சனத்தோடு தரும் நாட்டுபுறக் கவிஞர். நாட்டுப்புறப் பாடற் பாங்கில் நெஞ்சை வசப்படுத்தும் கவிதைகளைத் தந்தவர்.

"வாழ்க்கை ஒரு வெற்றி, ஒரு துடிப்பு
ஒரு காதற்பா, ஒரு இசை
மண்ணின் மாய மோனையில் பிறந்து
அரைத்தூக்கத்திலும் அதிசயத்திலும் அது உதிர்கிறது."

என்பது கு.ப.ராவின் கவிதை. சிறிது வெளிச்சம் 21 கவிதைகள் அடங்கிய தொகுப்பு. மனித இயல்பை நுட்பமாகக் காணும் திறன் படைத்தவை இவருடைய கவிதைகள்.

சி.சு. செல்லப்பா

புதுக்கவிதையைத் தன்'எழுத்து' இதழின் மூலமாக வளர்த்தவர். புதுக்கவிஞர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர். நீ இன்று இருந்தால்? மாற்று இதயம் ஆகிய இரு தொகுதிகள் இவருடையவை.

வல்லிக்கண்ணன்

கிருஷ்ணசாமி என்பது இவருடைய பெயர். நையாண்டி பாரதி எனும் புனைப்பெயரில் எழுதியவர். புதுக்கவிதைத் தொகுப்பு 'அமர வேதனை'. இவரது புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் எனும் திறனாய்வு நூல் சாகித்ய அகாதமி பரிசு பெற்றது. கவிதைகளில் உரைநடைத் தன்மையும், உயிரற்ற சொற்களும் மிகுதியாக அமைந்தமையால் சிறந்த புதுக்கவிஞராக அர்த்தப்படவில்லை.

புதுமைப்பித்தன்

இயற்பெயர் விருத்தாசலம். சிறுகதை இலக்கியத்தில் செய்த புதுமைகளைப்போலவே புதுக்கவிதையிலும் புது உருவ அமைப்பைத் தந்தவர். மரபுக் கவிதையிலும் புதுமைகள் செய்தவர். இவருடைய கவிதைகளில் எள்ளல் தன்மையும், நையாண்டிப் போக்கும் மிகுந்திருக்கும். 'புதுமைப்பித்தன் கவிதைகள்' என்பது இவருடைய கவிதைத் தொகுதி.

"வேதம் படித்திடுவோம்; வெறுங்கை முழம் போட்டிடுவோம்
சாதத்துக்காகச் சங்கரனை விற்றிடுவோம்!

Scanned by CamScanner

அத்தனைக்கும் மேலல்லோ அகிம்சை கதைபேசி
வித்தகனாம் காந்தியினை விற்றுப் பிழைக்கின்றோம்"

என்பது புதுமைப்பித்தன் தந்த சிந்தனையைத் தூண்டும் கவிதை.

**சிற்பி பாலசுப்பிரமணியன்**

கவிதை சமூகத்தின் போர்வாள் என்ற நோக்குடையவர். எல்லார்க்கும் எல்லாம் என்ற பொதுவுடைமைச் சிந்தனை உடைய புதுக் கவிஞர். கவித்துவம் ததும்பும் வாழ்க்கைச் சித்திரிப்பு, புதிய உருவம், புதிய நடை, போலித்தனமில்லாத படைப்பு ஆகியன இவரது கவிதைக் கோட்பாடுகள், நிலவுப்பூ, சிரித்த முத்துக்கள், ஒளிப்பறவை, சர்ப்பயாகம், மௌன மயக்கங்கள், புன்னகை பூக்கும் பூனைகள், இறகு, ஒரு கிராமத்து நதி போன்ற சிறந்த படைப்புகளைத் தந்த வானம்பாடிக் கவிஞர் மணிவிழாக் கண்ட பெருமைக்குரியவர். படிமம் மற்றும் கதைக் கவிஞர். இவருடைய கவிதை நூல்கள் அனைத்தையும் தொகுத்து மணிவாசகர் பதிப்பகம் சிற்பியின் கவிதை வானம் எனும் சிறந்த தொகுப்பு நூலாக வெளியிட்டிருக்கிறது.

"எங்கிருந்து வருகிறது
இந்த நதி?
மலைகளின்
மௌனம் உடைந்தா?
முகில்களின்
ஆடை கிழிந்தா?
வனங்கள் பேசிய
இரகசியங்கள் கசிந்தா?
இல்லை...
என்னிலிருந்து
என் அந்தரங்கங்களின்
ஊற்றுக்கண் திறந்து
என் மார்புகள்
புல்லரித்து
என் ரத்தக்குழாய்களில்
புல்லும் பூவும் மணந்து
என்னை முழுக்காட்டி
என்னையே கரைத்துக் கொண்டு
அங்கிருந்து வருகிறது
இந்த நதி."

Scanned by CamScanner

என்ற கவிதையில் கவிஞர் சிற்பி தன்னை அவருடைய ஊரில் பாய்ந் தோடும் நதியோடு அணைத்துக் கொண்டு தன்னுடைய படைப்புகளுக்கு வற்றாத மூல ஊற்றாக அந்நதி திகழ்வதாகக் கருதுவது புதுக்கவிதையில் புதிய பரிணாமம் எனலாம். ஒரு கிராமத்து நதி சிற்பிக்கு சாகித்ய அகாதமி பரிசைப் பெற்றுத் தந்தது.

**அப்துல் ரகுமான்**

கவிக்கோ என்ற சிறப்புப் பெயருக்குரியவர். கவியரங்கத் தனிக்கவிஞர். புதுக்கவிதையில் புதிய வார்த்தைகளை வார்ப்பதில் வல்லவர். சிலேடையாகக் கவிதை தந்து சிரிக்கவும் சிந்திக்கவும் செய்பவர். படிமக் கவிஞர். பால்வீதி, நேயர் விருப்பம், மரணம் முற்றுப்புள்ளி அல்ல, சொந்தச் சிறைகள், சலவை மொட்டு, முட்டை வாசிகள், அவளுக்கு நிலா என்று பெயர், இன்றிரவு பகலில், கரைகளே நதியாவதில்லை போன்றவை கவிக்கோவின் தரமான படைப்புகள். இன்றும் இதழ்களின் வழி படைப்புகளைத் தந்து கொண்டிருப்பவர். மனிதனின் மறுபக்கத்தைக் காட்டும் பித்தன் எனும் கவிதைத் தொகுப்பை அண்மையில் வெளியிட்டுள்ளார்.

**"குறிஞ்சி என் கொங்கை**
**முல்லை என் கூந்தல்**
**மருதம் என் மணிக்கரம்**
**நெய்தல் என் பணிப்பெண்**
**பாலை என் வேனிற்கால வியாதி!"**

என்பது மண் எனும் தலைப்பில் அமைந்த கவிக்கோவின் சிந்தனைப் பதிவு. அரசியல்வாதிகளுக்கு எனும் தலைப்பில் இடம் பெற்றுள்ள

**"பேனாக்களே**
**கிரீடங்களைக் கழற்றிவிட்டுத்**
**தலைகுனியுங்கள்**
**நீங்கள் இருப்பது**
**தாள்களுக்காக**
**பைகளுக்காக அல்ல!"**

என்ற கவிதை சிந்தனைக்குரியது.

**மீரா**

மீ. ராசேந்திரன் என்பது பெயர். உவமைக்கவிஞர் சுரதாவின் தாக்கத்தால் சிறுவயதிலேயே கவிதை படைத்தவர். புதுக்கவிதை

Scanned by CamScanner

வரலாற்றில் தனித்துச் சுட்டுவதற்குரியவர். அன்னம், அகரம் பதிப்பகங்களின் வாயிலாகத் தரமான நூல்கள் பலவற்றைப் புதுப்பார்வையோடு வெளியிட்டுச்சாதனைப்படைத்தவர். இராசேந்திரன் கவிதைகள், மூன்றும் ஆறும், ஊசிகள், கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள் ஆகியன இவரது படைப்புகள். இவற்றுள் கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள் ஒரு புதுமையான சாதனை படைப்பு.

மாமன் மகளைச் சொத்துக்காக மணந்து கொள்ளும் இன்றைய இளைஞர்களின் செயல்பாட்டை வெளிக்காட்டுவதன் மூலம் நம் சமூக அமைப்பை, திருமண முறையை உணர்வுகளைப் பொருளாதார காரணங்களுக்காகச் சாகடித்து விடும் இளைஞர்களை

"உனக்கும் எனக்கும்
ஒரே ஊர்-
வாசுதேவ நல்லூர்...
நீயும் நானும்
ஒரே மதம்...
திருநெல்வேலிச்
சைவப்பிள்ளைமார்
வகுப்புங்கூட....
உன்றன் தந்தையும்
என்றன் தந்தையும்
சொந்தக்காரர்கள்-
மைத்துனன்மார்கள்
எனவே
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடைநெஞ்சம் தாம் கலந்தனவே"

என கவிஞர் மீரா விமர்சிப்பது சிந்தனையைத் தூண்டுகிறது.

புவியரசு

ஜகன்னாதன் எனும் பெயருடைய வானம்பாடிக் கவிஞர். கவிதை. வரலாறு. இலக்கியம், நாடகம் போன்ற துறைகளிலும் சாதனை புரிந்தவர். இதழ்களின் ஆசிரியராகவும், துணையாசிரியராகவும் இருந்து சிறப்பாகப் பணியாற்றியவர். புவியரசு கவிதைகள், இதுதான் மீறல், இப்போதே இப்படியே ஆகியன இவர் தந்த கவிதைத் தொகுப்புகள். நவீன நாடகங்கள் பலவற்றை மேடையேற்றியதும், திரைப்பட பாடலாசிரியராக விளங்குவதும், கவிதை கடந்து ஆற்றிவரும் அர்த்தமுள்ள பணிகள்.

Scanned by CamScanner

**சக்திகனல்**

வானம்பாடி கண்ட கவிஞர்களுள் முக்கியமானவர். பழனிச்சாமி என்ற பெயருடையவர். கவிதை, இலக்கியம், பொதுப்பணி ஆகியவற்றை நோக்காகக் கொண்டவர். சக்திக்கனல் கவிதைகள், புழுதிப்புயல், கனகாம்பரமும் டிசம்பர் பூக்களும், நீங்கள் கேட்டவை போன்ற படைப்புகளை அளித்த சிறப்பிற்குரியவர்.

**ஈரோடு தமிழன்பன்**

மரபுக்கவிதையில் வெற்றி பெற்றுப் புதுக்கவிதையிலும் சுவடுகள் பதித்தவர். விடிவெள்ளி என்ற பெயரும் உண்டு. இயற்பெயர் செகதீசன். கவித்துவமும் மக்கள் சார்ந்த புரட்சிக் கருத்துக்களும் ஒரு சேர இணைந்து, ஒடுக்கப்பட்டோரின் உரிமைக் குரலை ஒலிப்பனவாக அமைவன இவரது கவிதைகள். சிலிர்ப்புகள், தோணி வருகிறது, தீவுகள் கரையேறுகின்றன, சூரியப்பிறைகள், ஊமை வெயில், அந்த நந்தனை எரித்த நெருப்பின் மிச்சம் போன்றவை தமிழன்பனைப் புதுக்கவிஞராக அடையாளப்படுத்திய படைப்புகள்.

"ஏன்
இரவுகளில் மனிதர்கள்
தம்முள் பதுங்கியிருக்கும் விலங்குகளை
வேட்டையாட
விடுவிக்கின்றனர்?

என்ற வினாவை எழுப்பும் தமிழன்பன்

ஏன் என்றால்
மனிதனை அப்படி
மாற்றி வைக்கிறது
பகல்"

என்று பதில் உறுவது மனித இயல்பை எதார்த்தமாக எடுத்துக்காட்டுகிறது.

**எழில் முதல்வன் (மா. இராமலிங்கம்)**

சுரதாவைப் பின்பற்றி எழுதியவர். கவிஞர். உரை நடை ஆசிரியர். திறனாய்வாளர் எனும் பல கோணங்களில் சிந்தனைகளைப் பதிவு செய்து வருபவர். தற்காலப் படைப்பிலக்கியக்கர்த்தா. ஓர் ஆமையின் வருகை, நினைவுப் பூக்கள் ஆகியன இவரது புதுக்கவிதைத் தொகுப்புகள் ஆகும்.

Scanned by CamScanner

**தமிழ்நாடன்**

இயற்பெயர் சுப்ரமணியம், சிவப்புச் சிந்தனைகளைக் கவிதை யாக்கும் நோக்குடையவர். தற்காலக் கதையுலகில் குறிப்பிடத் தகுந்தவர். முற்போக்கும் தனிப்போக்கும் மிகுந்த அங்கதக் கவிஞர். அம்மா அப்பா, நட்சத்திரப்பூக்கள் போன்ற புதுக்கவிதைத் தொகுப்புகளையும், புதுக் கவிதையின் வடிவங்களும் வகைகளும் என்ற புதுக்கவிதைத் திறனாய்வு நூலையும் தந்தவர்.

"நகம் வெட்டும் சாக்கில்
விரலையே வெட்டிவிட்ட
செவிலித்தாயிடம்
சிக்கிக் கொண்டாய் நீ"

என இந்திய அம்மாவைப் பார்த்துப் பேசும் தமிழ் நாடனின் கவிதை புகழ் பெற்றது. நெருக்கடி கால பிரகடனத்தை மிகச்செறிவாக இக்கவிதைப் பிரதிபலிப்பதை உணரலாம்.

**குருவிக்கரம்பை சண்முகம்**

புனைபெயர் செங்குயில். கவிதையை இதயமாக நேசிப்பவர். புரட்சிக் கவிஞரையும், ந.பிச்சமூர்த்தியையும் வழிகாட்டியாகக் கொண்டவர். ஆங்கிலக் கவிதை உலகில் பைரனும் கீட்சும் பெற்றுள்ள இடத்தினைத் தமிழ்க் கவிதையுலகில் பெற்றுள்ள கவிஞர் குருவிக் கரம்பை சன்முகம் கவிதைகள், பூத்தவெள்ளி ஆகியன இவருடைய புதுக்கவிதைத் தொகுதிகள்.

சங்ககாலப் பெண்களுக்கு இடையே இல்லை
எங்கள் காலப் பெண்களுக்கு உடையே இல்லை!

என்பன போன்ற பகுதிகள் சமுதாய நோக்குமிக்க சிந்தனைக்குரிய கவிதைகளாக விளங்குகின்றன.

**இன்குலாப்**

இயற்பெயர் சாகுல் ஹமீது. புதுக்கவிதையில் புதுப்பாதை வகுத்த கவிஞர். உழைக்கும் வர்க்கத்தின் உயர்வுக்காகக் கவிதை வழி குரல் கொடுப்பவர். மார்க்சிய இலக்கியவாதி. இன்குலாப் கவிதைகள், சூரியனைச் சுமப்பவர்கள், கிழக்கும் பின் தொடரும், இவர்கள் எழுப்பிய இந்தப் பிரமிடுகள், மருத்துவச்சி ஆகியன இவரது படைப்புகள்

Scanned by CamScanner

**நா.காமராசன்**

வானம்பாடிக் கவிஞர்களில் சாதாரண வாசகனையும் ஈர்த்த பெருமைக்குரியவர். புதிய சொல்லாட்சிகளைத் தருவதில் வல்லவர்.

"ஏழைகளின் அடுப்பெரிப்போம்
இல்லையெனில்
சூரியனில் தீக்குளிப்போம்"

"நாங்கள் நிர்வாணத்தை
விற்பனை செய்கிறோம்
ஆடை வாங்குவதற்காக"

போன்ற கவிதைகளின் வேகத்தால் அனைவரது கவனத்திற்கும் உள்ளான சிறந்த கவிஞர். கறுப்பு மலர்கள், கிறுக்கல்கள், நாவல்பழம், மகா காவியம், சுதந்திரதினத்தில் ஒரு கைதியின் டைரி, தாஜ்மகாலும் ரொட்டித்துண்டும், சூரியகாந்தி, சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள் போன்ற படைப்புகள் இவருடையன.

**முகம்மது மேத்தா**

சமூகச்சிக்கல்களை மையமிட்டு எழுதும் தரமான புதுக்கவிஞர். உள்ளடக்கம், வடிவம் உணர்த்தும் முறையில் புதுமை, கற்பனை, நளினநடை, நலமான சொல்லாட்சி, ஆழமான மன உணர்வுகள் போன்ற பண்புகள் இவரது கவிதைகளின் தனித்துவம். இவரைப் பின்பற்றி எழுதிய புதுக்கவிஞர்கள் பலர். தமிழகக் கவிஞர் பேரவையின் தலைவராகப் பணியாற்றியவர்.

'எங்கள் வாழ்க்கை
இருட்டோடு
இல்லறம் நடத்துகிறது'

'பூக்களிலே நானும் ஒரு
பூவாகப் பிறந்தாலும்
பொன் விரல்கள் தீண்டலையே
பொன்விரல்கள் தீண்டலையே
நான் பூ மாலை ஆகலியே'

போன்ற கவிதைகள் சமுதாய நோக்குடைய சிந்தனைக் கவிதைகள். கண்ணீர்ப்பூக்கள், இதயத்தின் நாற்காலி, நந்தவன நாட்கள், காத்திருந்த காற்று, மனச்சிறகு, அவர்கள் வருகிறார்கள், முகத்துக்கு முகம், நடந்த நாடகங்கள், திருவிழாவில் ஒரு தெருப்பாடகன், ஒரு வானம் இரு

Scanned by CamScanner

சிறகு; ஊர்வலம் போன்றன மேத்தாவின் புதுக்கவிதைப் படைப்புகள். 'ஆகாயத்திற்கு அடுத்த வீடு' எனும் கவிதைத் தொகுப்புக்காக சாகித்ய அகாதெமி பரிசைப் பெற்றார்.

வலம்புரிஜான்

வார்த்தைச் சித்தர் எனப் போற்றப்படுபவர். பேச்சாற்றல் மிக்கவர். கவிஞர், கட்டுரையாளர், திறனாய்வாளர், புனைகதையாளர், நாடக ஆசிரியர் எனப் பல துறைகளில் சாதனை படைத்தவர். இதழாசிரியர். அனுபவம் மிக்கவர்,

'எப்போதும் வருவதல்ல கவிதை
எப்போதோ வருவது கவிதை'

'நினைத்தால் வருவதல்ல கவிதை
நெஞ்சு கனத்தால் வருவது கவிதை'

எனக் கவிதைக்குப் புது இலக்கணம் தந்த இலக்கியச் சித்தர். காற்றின் கவசம், அம்மா அழைப்பு, ஒரு நதி குளிக்கப் போகிறது, பதினோராவது கட்டளை, அந்த இரவில் சந்தன மின்னல், நத்தைக் கூடுகள், கவிதைக் கனிகள் போன்ற படைப்புகளைத் தந்தவர்.

பாலா

பாலசந்திரன் என்பதன் சுருக்கம். புதுக்கவிதை உலகில் தடம் பதித்தவர். பல நூல்களுக்கு முன்னுரை எழுதிய திறனாய்வாளர். நீ என்ற கவிதைத் தொகுப்பைத் தொகுப்பித்தவர். 'புதுக்கவிதை ஒரு புதுப் பார்வை' எனும் நூல் புதுக்கவிதைகளின் நோக்கையும், வெளியீட்டு முறைமையையும் பற்றிய திறனாய்வு நூலாக விளங்குகின்றது. 'இன்னொரு மனிதன்' என்ற கவிதைத் தொகுப்பைத் தந்தவர். வளர்ந்து வரும் பலபுதிய தமிழிலக்கியப் போக்குகளுக்கு வழிகாட்டியாய் விளங்கி வருபவர்.

'வாக்குப் பெட்டி' என்ற தலைப்பில் அமைந்த கவிதையில் அரசு, ஆட்சி, கட்சி ஆகியவை சாதாரண மனிதனுக்கு மானம் காக்க ஆடை வழங்கமுடியாத நிலையை

"நாங்கள்
எங்களில் ஆடையற்றவருக்கு
ஒரு சட்டை தருகிற
ஒரு தையற்காரர் வேண்டி
இந்தப் பெட்டிக்குள்

Scanned by CamScanner

சில நேர்த்தியான ஊசிகளைப்
போட்டோம்
நீ திறந்து எடுத்துக் கொண்ட போது
அவை எங்கள் உடமைகள்
எல்லாம் பறித்து அடைத்துக் கொள்ளும்
கோணி ஊசிகளாக மாறிவிட்டால்
பாவம் நீ என்ன செய்வாய்"

என்ற கவிதையில் பதிவு செய்து இன்றைய ஆட்சிமுறையை ஏளனம் செய்கின்றார்.

**அக்னி புத்திரன்**

இயற்பெயர் அரங்கராசன். இயக்கச் சிந்தனைகளைக் கவிதைகளாகத் தந்தவர். வானம்பாடிக் கவிஞர். சமுதாய மாற்றம், மாறி வரும் வாழ்க்கை மதிப்பீடுகளை உணர்த்துவது இவரது நோக்கம். சோதனை நாடக இயக்கங்களில் ஈடுபாடு கொண்டு செயலாற்றி வருபவர். விடுதலைக்குப்பின் தமிழில் புதுக்கவிதை என்பது புதுக்கவிதையைப் பற்றிய திறனாய்வு நூலாக விளங்குகின்றது.

**வைரமுத்து**

வானொலியில் முதன் முதலில் புதுக்கவிதைப் பாடிய பெருமைக் குரியவர். நாடறிந்த கவிஞர். திரைப்படப் பாடலாசிரியர். புதிய இளம் கவிஞர்களுக்கு வழிகாட்டியாக விளங்குபவர். சிகரங்களை நோக்கி, ரத்ததானம், திருத்தி எழுதிய தீர்ப்புகள், இன்னொரு தேசியகீதம், கவிராஜன் கதை, கொடி மரத்தின் வேர்கள், என் மௌனத்தின் சப்தங்கள் போன்றன புதுக்கவிதைத் தொகுதிகள். துணைவியார் பொன்மணி வைரமுத்துவும் புதுக்கவிஞரே.

"அவன்
ஒரு
பட்டுவேட்டி பற்றிய
கனவில் இருந்த போது
கட்டியிருந்த கோவணம்
களவாடப்பட்டது"

என 1947, ஆகஸ்டு 15 என்ற தலைப்பில் எழுதிய கவிதை சமூக அவலத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

Scanned by CamScanner

**பாப்பிரியா**

இயற்பெயர் பொன்.திராவிடமணி.பாட்டாளி மக்களின் மனக் குமுறல்களைக் கவிதையாகத் தந்தவர். நாவலாசிரியராகவும், சிறுகதை யாசிரியராகவும் விளங்குகின்றார். கண்சிமிட்டும் கல்லறைகள், வீதிகளை நேசிக்கும் வீணைகள், எங்கள் கிராமத்துப் பக்கம் போன்றன இவருடைய புதுக்கவிதைத் தொகுதிகள். இவற்றுள் கிராமிய வாழ்வினைப் புதுக் கவிதையில் தரும் முதல் நூலாக விளங்குவது எங்கள் கிராமத்துப் பக்கம் எனும் கவிதைத் தொகுப்பு.

**அமுதபாரதி**

அமுதோன் எனும் பெயரில் சிறந்த ஓவியராகச் செயல்பட்டு வருபவர். கவியாற்றல் மிக்கவராகக் காணப்படுகின்றார். உதய காலங்கள், இனை தேடும் இதயம், மன்மத ராகங்கள், புள்ளிப் பூக்கள் போன்றவை இவருடையன. இவற்றுள் தமிழில் முதன் முதலாக வெளிவந்த முழு ஹைகூ கவிதை நூலாகச் சிறப்புப் பெறுவது புள்ளிப் பூக்கள் எனும் தொகுப்பாகும்.

**கழனியூரான்**

இயற்பெயர் அப்துல் காதர். புதுக்கவிதையின் பரிணாம வளர்ச்சி யாகவும், ஜப்பானியக் கவிதைத் தாக்கத்தாலும் விளைந்த ஹைகூ என்ற வடிவமைப்பில் கவிதைகள் தருவதில் வல்லவர். நிரந்தர மின்னல்கள், நெருப்பில் விழுந்த விதைகள், நட்சத்திர விழிகள் போன்றன இவருடைய ஹைக்கூ கவிதைத் தொகுதிகள்.

**"மனிதர்களை உரமாக்கும்**
**ஞானிகளுக்கு உரமாகும்**
**வறுமை'**
**"நேற்றுவரை தூற்றியவர்கள்**
**நாளை முதல் போற்றுவார்கள்**
**இன்று அவன் இறந்துவிட்டான்"**

இவை கழனியூரான் படைத்தளித்த சிந்தித்து மகிழ்தற்குரிய சில ஹைகூ கவிதைகள்.

**ஞானக்கூத்தன்**

எதிர்ப்புத் தன்மையைக் கவிதை மூலம் வெளிப்படுத்துபவர். கசடதபற, நடை போன்ற இதழ்களின் வழி அடையாளப்படுத்தப் பட்டவர். அன்று வேறு கிழமை என்ற புதுக்கவிதைத் தொகுப்பையும், கவிதைக்காக என்ற திறனாய்வு நூலையும் தந்துள்ளார்.

Scanned by CamScanner

**கலாப்பிரியா**

பாலியல் தன்மைக் கவிதைகளை எதார்த்தமாகப் படைப்பவர். காதல் சோகம் விரவி வரும் 'எட்டயபுரம்' எனும் கவிதைத் தொகுதி புகழ்பெற்றது. கலாப்பிரியா கவிதைகள் எனும் பெயரில் முழுத்தொகுப்பு வெளிவந்துள்ளது.

**தருமு சிவராமு**

புதுக்கவிதையில் அறிவியலைப் புகுத்தியவர். கைப்பிடியளவு கடல், கண்ணாடிக்குள்ளிருந்து போன்ற புதுக்கவிதைத் தொகுதிகள் புகழ்பெற்றன. இலங்கையைச் சேர்ந்த இவர் சிறந்த திறனாய்வாளராக வும் விளங்கியவர்.

**எஸ்.வைத்தீஸ்வரன்**

படிமம், இயற்கையைக் காட்சிப்படுத்தல் போன்ற உத்திகளைப் படைத்துக் கவிதை இயற்றுபவர். நகரச்சுவர்கள் எனும் கவிதைத் தொகுப்பு நகர் சார் பிரச்சனைகளை மையமிட்டது.

**பசுவய்யா**

இயற்பெயர் சுந்தரராமசாமி. நாவலாசிரியர். அழகியல், அங்கதம், படிமம், இருண்மை போன்றன இவரது கவிதை உத்திகள். 107 கவிதைகள் எனும் பெயரில் இவருடைய கவிதைகள் தொகுப்பாக வெளிவந்துள்ளது.

**ஞானி**

மார்க்கசியத் திறனாய்வாளர். கல்லிகை என்ற கதைக்கவிதை இவருடையது. தொன்ம உத்தியைப் பயன்படுத்துவதில் சிறந்தவர்.

**சி.மணி**

சிற்பியின் இலக்கிய விருது பெற்றவர். ஒளிச்சேர்க்கை, வரும் போகும் முதலியவை இவரது கவிதைத் தொகுதிகள். பச்சையம் எனும் கவிதை சிறப்பானது.

**பழமலய்**

நாட்டுப்புறம் சார்ந்த கவிதைகளைப் படைப்பதை உத்தியாகக் கொண்டவர். சிற்பி, இலக்கிய விருதைப் பெற்றவர். இவருடைய சனங்களின் கதை. குரோட்டன்களோடு கொஞ்ச நேரம், இன்றும் என்றும், முன்நிலவுக் காலம், புறநகர் வீடு, இரவுகள் அழகு, வேறு ஒரு சூரியன் போன்ற புதுக்கவிதைகள் தொகுப்புகளைத் தந்தவர்.

Scanned by CamScanner

"முத்தால் ராவுத்தரே... என்று
மூச்சுக்கு மூச்சு
பெயர் வைக்க அவன் பெயரைப்
பெற்றோர்கள் கேட்டால்
என் பெயரைச் சொல்கிறான்
'பாட்டான்' சொல் மருவிப்
பட்டாணி ஆகிவிட்டேன்
மற்றபடி நான்
உப்புக்கடலையும் இல்லை!
பொட்டுக் கடலையும் இல்லை!"

என்ற கவிதையில் 'முத்தால் ராவுத்தர்' என்ற இசுலாமியப் பெயர் வட்டார வழக்கில் பெயர் மருவி பட்டாணி சாமி ஆகிவிட்டதை நகைச்சுவை யோடு எடுத்துக்காட்டுகிறார்.

அபி

தமிழ்ப்பேராசிரியர். முழுப்பெயர் அபிபுல்லா. மனக்கோலங்களை கவிதையாக்குவதில் தேர்ந்தவர். அந்தர நடை என்பது இவரது கவிதைத் தொகுப்பு.

"விளைந்த வினை
விளைந்தது
விளைந்தவை உதிர்ந்து
மீண்டும் பெருகின
மீண்டும் பெருகின
மீண்டும்..."

என்னும் கவிதை மனத்தின் ஊசலாட்டத்தைக் காட்சிப்படுத்துகிறது.

கல்யாண்ஜி

மென்மையாக அதிர்ச்சியூட்டும் புதுக்கவிதைகளைத் தருபவர். இருத்தல் சிந்தனைகளைக் கவிதைகளில் காட்சிப்படுத்தும் திறனுடையவர். புலரி, காலம் என்ற கவிதைத் தொகுப்புகளைத் தந்தவர்.

"கருப்பு வளையல் கையுடன் ஒருத்தி
குனிந்து வளைந்து பெருக்கிப் போனாள்
வாசல் சுத்தமாச்சு மனசு குப்பையாச்சு"

என இளைஞனின் மனநிலையை இக்கவிதை காட்சிப்படுத்துகிறது.

Scanned by CamScanner

**பஞ்சு**

பஞ்சாங்கம் என்பது இவரது பெயர். சமுதாய நோக்கில் கவிதைகளைத் தருபவர். ஒட்டுப்புல், நூற்றாண்டுக் கவிதைகள் என்ற இரண்டும் இவருடையன. சிறந்த புத்திலக்கியத் திறனாய்வாளராகவும் விளங்குகிறார்.

**கந்தர்வன்**

சமுதாய விமர்சனம் சார்ந்த கவிதைகளை அங்கதச் சுவையோடு படைப்பவர். சிறைகள், கிழிசல்கள் என்ற கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார்.

**ஆண்டாள் பிரியதர்சினி**

தமிழ், ஆங்கில இலக்கியங்களில் பரிச்சயம் மிக்கவர். பெண்களின் எதிர்பார்ப்புகளை, கனவுகளைத் தனது கவிதைகளில் பதிவு செய்வதில் வெற்றி பெற்றவர். சுயம் பேசும் கிளி, முத்தங்கள் தீர்ந்து விட்டன ஆகியன இவருடைய சிறந்த புதுக்கவிதைத் தொகுப்புகளாகும். பெண்களின் வாழ்க்கையில் புதுமை எண்ணங்கள் முழுவீச்சு பெற வேண்டும் என்ற என்னத்தில் உருவான

**"மறுபடி மறுபடிக்**
**கழுவி மெழுகி**
**மறுபடி மறுபடி**
**சமைத்து சமைத்து**
**மறுபடி மறுபடி**
**சுமந்து தளர்ந்து**
**மறுபடி ஓடி**
**மறுபடி ஓய்ந்து**
**மகளே... என் மகளே**
**இதுவா என் வாழ்க்கை"**

என்ற கவிதை கவிஞரின் பெண்கள் பற்றிய கண்ணோட்டத்தை எடுத்துக் காட்டுகிறது.

**பத்மாவதி தாயுமானவன்**

கவியரங்குகளில் கவிதைகள் தந்து பலருடைய கவனத்தை ஈர்த்து வருபவர். சமூக அவலங்களைக் கிண்டல் செய்யும் அங்கதத் தன்மை இவரது கவிதைகளில் வெளிப்படும். மறுபடியும், அடுப்பங்கரை

வெளிச்சத்தில் ஆகியன இவரது கவிதைத் தொகுப்புகள் கடமையைச் செய் எனும் கவிதையில்

"கீதா உபதேசம்
அற்புத காட்சிதான்
விரும்பி ரசிப்போம்
விலைக்கு வாங்கி
வீட்டில் சுவரில்
மாட்டி (மட்டும்) வைப்போம்

என்று கூறுகிறார். கீதையில் சொல்லப்படும் உபதேசங்கள் மறுபார்வைக்கும் விமர்சனத்திற்கும் உட்படுத்தப்படவேண்டிய சூழல் இது என்பதைக் கவிதைக் குறிப்பாக உணர்த்துகிறது.

**சல்மா**

ரொக்கையா மாலிக் என்னும் இயற்பெயர் கொண்ட இவர் சல்மா என்ற புனைபெயரில் பெண்ணிய மொழி சார்ந்த கவிதைகளைப் படைத்து வருபவர். ஒரு மாலையும் இன்னொரு மாலையும், பச்சைத் தேவதை ஆகியன இவரது கவிதைத் தொகுப்புகள். பயங்கள் என்ற தலைப்பில் அமைந்த

"இன்று மறுபடியும்
ஒருமுறை
என்னைக் கண்ணாடியில் பார்க்கிறேன்
பிறர் பயப்படும்படியாகக்
குறிப்பாக நீ பயம் கொள்ளும்படியாக இல்லை
என் தோற்றம்
நான் தூங்கும் போதும்
அதைரியத்துடன் விழித்திருக்கிறாய்
இன்றும்
என்னை வீழ்த்திக் கொண்டிருப்பது
உன் வலிமையில்லை
உன் பயங்கள்

என்ற கவிதை சல்மாவின் புதிய நோக்கையும் போக்கையும் புலப்படுத்துகிறது.

**சுகிர்தாராணி**

ஆணாதிக்க உலகம் கட்டமைத்த பெண் பற்றிய பார்வைகளை உடைத்தெறியும் வகையில் கவிதைகள் படைத்து வருபவர். கைப்பற்றி என் கனவு கேள், இரவு மிருகம் ஆகியன இவரது கவிதைத் தொகுப்புகள்

Scanned by CamScanner

"என் மீது உருண்டு திரண்ட
உன் பிரியத்தையே பிழிந்து தருகின்றேன்
அது விஷச் சாறாகவும் இருக்கலாம்"

என்ற கவிதை இவருடைய ஆணாதிக்க எதிர்ப்புக் குரலை வெளிப் படுத்துவதைக் காணலாம்

மாலதி மைத்ரி

தனக்கே உரித்தான கவிதை மொழியைக் கண்டறிந்து பெண்ணியம் சார்ந்த கவிதைகளைப் படைத்து வருபவர். சங்கராபரணி, நீரின்றி அமையாது உலகு, நீலி ஆகியவை இவருடைய கவிதைத் தொகுப்புகள்.

"ஃபேர் அண்ட் லவ்லி முகம்
கிளினிக் ப்ளஸ் கூந்தல்
லக்ஸ் பட்டு போன்ற சருமம்
ஐடெக்ஸ் கண்கள்
இமாமி இதழ்கள்
லக்மே நகங்கள்
லலிதாவின் ஆபரணங்கள்
நல்லியின் ஆடைகள்
சரவணாவின் சீர்வரிசைகள்
நாளொரு மேனியும்
பொழுதொரு வண்ணமுமாக
உறவாடியதில்லை அவற்றுடன்
என்றாலும்
அவள் முன்னே
இராஜகுமாரர்கள்
பிரியாணிப் பொட்டலத்துடன்
தோன்றுகிறார்கள் பின்னிரவில்
வீதியோரமாக அமர்ந்து
பேன்கள் உதிரும்
தலையைச் சொறிந்தபடி
தகரக்குவளையில் உருளும்
கூழாங்கல்லின் லயத்துடன்
பாடிக் கொண்டிருக்கிறாள்
பகலெல்லாம் பைத்தியக்காரி"

நுகர்வோர் என்ற தலைப்பில் அமைந்த இக்கவிதை நமது கலாச்சாரத்தில் பெருகிவரும் விளம்பர மோகங்களை எதார்த்தமான தன்மையில் விமர்சனம் செய்கிறது.

Scanned by CamScanner

தமிழில் புதுக்கவிஞர்களின் பட்டியலும் படைப்பும் மிக அதிகம். பலர் செறிவான புதுக்கவிதை படைப்புகளைத் தந்து கொண்டிருக்கின்றனர். பிரான்சிஸ் கிருபா, தேவதச்சன், தேவேந்திர பூபதி, கபிலன் வைரமுத்து, யுகபாரதி, தபசி, அன்பாதவன், என்.டி.ராஜ்குமார், லதா, அ. வெண்ணிலா, அழகுநிலா, வைகைச் செல்வி, ரமேஷ்-பிரேம், கரிகாலன், இரா.முருகன், கோகுல கண்ணன், புவன் சந்திரசேகர், இளம்பிறை, தேன்மொழி, கனிமொழி, மதிவாணன், சூத்ரதாரி ஆகியோர் புதுக்கவிஞர்களாகத் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு வளர்ந்து வருபவர்கள்.

Scanned by CamScanner

# 30

# தமிழில் ஹைகூ - சென்ரியு - குக்கூ கவிதை வடிவங்கள்

காலமாற்றங்களுக்கேற்ப இலக்கியங்கள் மாறுதல்களையும் புதுமைகளையும் பெற்று வளர்ந்து வருகின்றன. உலக இலக்கிய வரலாறுகளும் இந்த உண்மையை உணர்த்துகின்றன. மாற்றமும் புதுமையும் பெற்றுவளர்ந்து வரும் இலக்கிய வகைகளில் கவிதை முதலிடம் வகிக்கின்றது. வடிவம், உள்ளடக்கம் என்ற நிலைகளில் செறிவான கவிதை இலக்கியம், தோன்றிய காலம் முதல் இன்றுவரை மாபெரும் மாற்றங்களைப் பெற்றுள்ளது. மரபான பாடுபொருள்களையும் யாப்பு வரையறைகளையும் ஓசைக் கட்டுப்பாடுகளையும் கொண்டு இயங்கி வந்த தமிழ்க்கவிதை இலக்கியம் இருபதாம் நூற்றாண்டில் நெகிழ்வடைந்தது. இலக்கணத் தளைகளிலிருந்து விடுப்பட்டுப் புதுக் கவிதை என்ற பெயரில் பரந்த பாடுபொருளைப் புலப்படுத்தும் ஆற்றல் பெற்றது.

அதன் பின்னர் புதுக்கவிதை எனும் வடிவத்தில் அல்லது வகையில் இருந்து மாறுபட்ட 'ஹைகூ' 'லிமரைக்கூ','சென்ரியு' 'குக்கூ' போன்ற வடிவங்களில் கவிஞர்கள் தங்களுடைய எண்ணங்களைப் பதிவு செய்ய முற்பட்ட நிலையில் தமிழ்க்கவிதைகளின் பாடுபொருள் மேலும் விரிவடைந்ததோடு தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களில் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டிய கவிதை வடிவங்களாகவும் இவை ஏற்றம் பெற்றன.

**ஹைகூ**

தமிழ் இலக்கியம் சிறு கதையையும் நாவல்லையும் மேலைத் திசையிலிருந்து பெற்றது. கீழ்த்திசையிலிருந்து எதையும் பெறவில்லை.

Scanned by CamScanner

ஹைகூ தான் முதன் முதலாக ஒரு கீழை நாட்டிலிருந்து நாம் பெறும் இலக்கிய வகையாகத் திகழ்கின்றது.

ஹைகூ ஜப்பானில் பிறந்திருந்தாலும் அதன் வேர் அதற்கு மேற்கில் உள்ள சீனத்தில் ஊன்றியிருக்கிறது. காரணம் ஹைகூவை இயற்றிய ஜப்பானியப் பெருங்கவிஞர்கள் பௌத்தத்தோடு தொடர்புடையவர்கள். ஜப்பானிய ஹைகூவின் கர்த்தாக்களாக பாஷோ, பூஸன், ஐசா, ஷிகி என்ற நால்வர் சுட்டப்படுகின்றனர். இவர்களில் பாஷோ ஹைகூவின் பிதாமகன் அல்லது ஆதிகவி எனச்சிறப்பிக்கப்படுகிறார். ஹைகூவின் ஆதிப்பெயர் 'ஹொக்கூ' என்பதாகும்.

ஹைகூ அதன் எல்லைகளைக் கடந்து உலா வருவதற்குக் காரணம் அதன் உருவம் எனலாம். ஜப்பானியர்களைப் போன்றே ஹைகூ வாமன உருவில் இருப்பினும் அறிவார்ந்த செறிவுமிக்க வலிமையான சொற்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

முதல் அடியில் 5 அசைகள், இரண்டாவது அடியில் 7 அசைகள் மூன்றாவது அடியில் 5 அசைகள் ஆக 17 அசைகள் கொண்ட மூன்று அடிகளில் அமைந்த கவிதை வடிவம் ஹைகூ. ஒரு புதிர்போல உணர்த்தப்படும். செய்தி தொக்கி நிற்கும், முதல் இரு அடிகள் ஒன்றுக் கொன்று தொடர்பற்றும், மூன்றாம் அடி இவற்றை ஒன்றிணைத்து ஒரு புதிய பொருளைத் தரும் விதத்திலும் இது அமையும். தமிழில் வழங்கும் விடுகதைகளைப் போன்றவை எனலாம். ஹைகூவின் இலக்கணத்தை மறந்துவிட்டால் தமிழ் இலக்கியத்தில் ஹைகூ காட்சிகளும், சாயலும், நிரம்ப இருப்பதை அடையாளம் காணலாம். ஆனாலும் செறிவான ஹைகூ கவிதைகளைத் தமிழுக்குத் தந்தவர்கள் வானம்பாடி இயக்கக் கவிஞர்கள் எனலாம். அவர்களைத் தொடர்ந்து இன்று அதிகமான ஹைகூ கவிதைகளும் கவிஞர்களும் உருவாகியிருக்கின்றனர். ஆனால் அவர்களுடைய படைப்புகளில் ஹைகூவிற்குரிய பண்புகள் செறிவாக அமையவில்லை. மாறாக மூன்றடி என்ற வடிவ நிலைப்பாடு மட்டுமே தென்படுகிறது.

தமிழில் செறிவான அழுத்தமான ஹைகூ கவிதைகளை முதலில் அறிமுகப்படுத்தியவர் கவிக்கோ அப்துல் ரகுமான் ஆவார். 1979 ஆம் ஆண்டு இவர் வெளியிட்ட பால்வீதி என்ற புதுக்கவிதைத் தொகுப்பில் 'சிந்தர்' என்ற தலைப்பில் ஒரு சில ஹைகூ கவிதைகளை மட்டும் வெளி யிட்டார். தமிழில் முழுதும் ஹைகூ கவிதைகளின் தொகுப்பாக முதலில் வெளிவந்தது அமுதபாரதி எழுதிய 'புள்ளிப்பூக்கள்' (1984) என்ற

Scanned by CamScanner

நூலாகும். அதன் பின்னர் ஏறத்தாழ பதினைந்து தரமான ஹைகூ கவிதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. சில ஹைகூ கவிதைகளை எடுத்துக் காட்டி விளக்குவது மாணவர்களுக்கு ஹைகூ கவிதைகள் மீதான புரிதலை அதிகப்படுத்தும்.

**"இரவெல்லாம்**
**உன் நினைவுகள்**
**கொசுக்கள்"**

என்ற அப்துல் ரகுமானின் ஹைகூவில் முதலிரண்டு அடிகள் காதலியை நினைபடுத்துவதைப் போல் அமைந்து மூன்றாவடி அடி அதிர்ச்சியையும் அழகிய கவிதைச் சுவையையும் தருவதைக் காணலாம்.

அடுத்தவன் அழிவில் ஒருவனின் பிழைப்பு இருப்பது அருவருக்கத் தக்க ஒன்று. ஆனால் பிணத்தை எரிப்பவனின் பிழைப்பு மற்றவரின் மரணத்தை நம்பி இருக்க வேண்டிய அவலம். அவன் வீட்டில் அடுப்பு எரிய வேண்டுமானால் சுடுகாட்டில் பிணங்கள் எரிந்தாக வேண்டும். இந்த அவலத்தை

**"எரியும் பிணங்கள்**
**வெட்டியான் வீட்டில்**
**சமையல்"**

என்ற அமுதபாரதியின் ஹைகூ கவிதை எடுத்துக்காட்டுகிறது.

**"பசித்த குழந்தைகள்**
**கஞ்சி காய்ச்சுவான் தந்தை**
**சுவரொட்டிகள் ஒட்ட"**

மித்ராவின் இவ் ஹைகூ கவிதையின் மூன்றாம் அடி அழுத்த மானது. வீட்டில் வறுமை. பசிக்குக் குழந்தைகள் அழுகின்றன. தந்தை கஞ்சி காய்ச்சுகிறான். இதுவரை குழந்தைகளின் பசியைப் போக்கவே கஞ்சி தயாராகிறது என நாம் நினைக்க இறுதி அடி அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது.

**"விசிறி வியாபாரி**
**காற்றைச் சுமந்து செல்கிறான்**
**வேர்க்க வேர்க்கத்தான்"**

என்ற ஹைகூ 'ஷிகி' என்ற ஜப்பானியக் கவிஞரின் தமிழ் மொழி பெயர்ப்பு. முரண் அழகு இதில் அமைந்து அழகு தருவதை உணரலாம். விசிறி வியாபாரி தன் தலை மீது விசிறிகள் பல வைத்திருந்தும் வேர்க்க வேர்க்கச் செல்லும் அவலத்தை இவ் ஹைகூ படம் பிடித்துக்காட்டுகிறது.

Scanned by CamScanner

இதுவரை தமிழில் வெளிவந்துள்ள தரமான ஹைகூ கவிதைத் தொகுப்புகளை அடையாளப்படுத்துவது ஹைகூ தேடலுக்கும், படைப்புக்கும் வழிவகுக்கும்.

- புள்ளிப்பூக்கள் - அமுதபாரதி
- புல்லின் நுனியில் பனித்துளி - அறிவுமதி
- காற்றின் கைகள் - அமுத பாரதி
- சூரியப் பிறைகள் - தமிழன்பன்
- நிரந்தர மின்னல்கள் - கழனியூரன்
- ஹைகூ கவிதைகள் - மித்ரா
- தீயின் பிணம் - இதயகீதா
- இலையுதிர்காலம் நிரந்தரமல்ல - பரிமளமுத்து
- நட்சத்திர விழிகள் - கழனியூரன்
- நனையாத நிலா - செ. செந்தில்குமார்
- இன்னும் மக்கள் - வாசல் வெளியீடு
- ஐக்கூ அந்தாதி - அமுத பாரதி
- சூரியச் செதில்கள் - அவை நாயகன்
- கம்ப்யூட்டர் மனிதர்கள் - அறிவுமதி
- உலக அமைதி நோக்கி - கு.மோகனராசு
- நிர்மலாசுரேஷ் கவிதைகள் - நிர்மலாசுரேஷ்

கவிஞர் நிர்மலா சுரேஷ் ஹைகூ கவிதைகளை முதன் முதலில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றுள்ளார் என்ற தகவலும் இங்குச் சுட்டத்தக்கது.

### பிற வடிவங்கள்

ஹைகூ என்ற கவிதை வடிவத்தை அடியொற்றி வாகா, ரென்கா, தான்கா, ஹைக்கை, லிமரைக்கூ, சென்ரியூ, குறும்பா போன்ற பெயரிலும் கவிதைகள் வெளிவந்துள்ளன. அவற்றுள் சென்ரியூ எனும் வகையை மட்டும் காண்பது பொருத்தமாக அமையும்.

### சென்ரியூ

சென்ரியூ என்னும் புனை பெயரைக் கொண்ட கராய்ஹச்சி மோன் என்பவர் தந்த வடிவம் சென்ரியூ. 'மதுக்கடைகளிலும் தேநீர்க்கடைகளிலும் ஜப்பானில் வளர்ந்த கவிதை' என்கிறார் ஈரோடு தமிழன்பன்.

Scanned by CamScanner

ஹைகூவின் மற்றொரு வகையாகவும் சென்ரியூவைக் கருதுகின்றனர். ஜார்ஜ் ஸ்வீட் என்ற அறிஞர்.

- இயற்கை ஹைகூ (ஹைகூ)
- மானுட ஹைகூ (சென்ரியூ)
- இயற்கையும் மானுடமும் இணைந்த ஹைக்கூ (ஒட்டுமாங்கனி ஹைகூ)

என ஆங்கில மொழி ஹைகூ மூன்று பொருண்மை வகைப்பாடுகளைக் கொண்டவை என்கிறார். அவருடைய கருத்தின்படி சென்ரியூ என்பதை மிகுதியும் மானுடத்தை உள்ளடக்கிய கவிதை வடிவமாகக் கருத இடமுண்டு. எலிசபத் ஜாக்குவாஸ் என்பவர்

- **ஆழமற்றது**
- **வேடிக்கையானது**
- **விடுகதை போன்றது**
- **நகைச்சுவையானது**
- **பொன்மொழி போன்றது**

எனச் சென்ரியூ கவிதைக்குரிய தன்மையைப் பட்டியலிடுகிறார். மேரி கேசல் என்பவரின் விளக்கம் ஹைகூவில் இருந்து சென்ரியூவைத் தெளிவாக வேறுபடுத்திக் காட்டுகிறது. ஹைகூவைப் போலவே மூன்று அடிகளில் அமைந்திருப்பினும்,

- ஹைக்கூவின் அங்கத வடிவம் சென்ரியூ.
- ஹைகூ இயற்கை உலகில் பார்வை செலுத்துகிறது. சென்ரியூ மக்கள், பொருள், சம்பவங்கள் ஆகியவற்றின் மீது பார்வையைக் குவிப்பது.

போன்ற விளக்கங்களின் அடிப்படையில் மானுடத்தை முதன்மையாகக் கொண்டு நடைபெறும் நிகழ்வுகளை அங்கதச்சுவையோடும் நகைச்சுவை உணர்வோடும் செறிவான கவிதை வடிவத்தில் பதிவு செய்து சிந்திக்கவும் சிரிக்கவும் வைக்கும் நோக்குடையன என சென்ரியூவைக் கருதலாம்.

தமிழில் ஹைக்கூ தொகுப்புகள் வெளிவந்துள்ள அளவிற்குச் சென்ரியு கவிதைத் தொகுப்புகள் வெளிவரவில்லை எனலாம். ஆனால் இவ்வடிவத்தைத் தமிழ்க்கவிதை உலகம் இனம் கண்டுள்ளது. தமிழில் வெளிவந்துள்ள ஈரோடு தமிழன்பனின் 'ஒரு வண்டி சென்ரியூ' எனும் தொகுப்பு சிறந்த சென்ரியூ தொகுப்பாக வலம் வந்து கொண்டிருக்கிறது. சென்ரியூக் கவிதைகளின் உயிர்ப்பான அங்கதத் தன்மையை மிகச் செறிவாகத் தமிழன்பன் கையாண்டுள்ளார்.

Scanned by CamScanner

"மழைநாள் கவலை
காளான்களை எண்ணுவதா?
கட்சிகளை எண்ணுவதா"

"ஆயிரம் பேரோடு
வேட்பு மனுத்தாக்கல்
ஐம்பது வாக்குகள்"

"சட்டம் ஒழுங்கை
காப்பாற்ற முடியவில்லை
சட்டசபையில்"

"பதவி இழந்த அமைச்சர்
அறிக்கை
இனி நாட்டுக்கு உழைப்பேன்"

ஈரோடு தமிழன்பனின் "ஒரு வண்டி சென்ரியூ" தொகுப்பில் இடம் பெற்றுள்ள மேற்சுட்டிய சென்ரியூக்கள் நிகழ்கால அரசியலை நறுக்குத் தெரித்தாற் போல அங்கதச் சுவையோடு வெளிப்படுத்துவதைக் காணலாம். இத்தகைய சென்ரியூ தொகுப்புகள் அதிகம் வெளிவரும் சூழலில் தமிழ்க் கவிதையின் போக்கும் நோக்கும் இன்னும் கூர்மைப் படும் என நம்பலாம். ஹைகூ, சென்ரியூ கவிதை வடிவங்களை நமது சங்க இலக்கிய ஐங்குறுநூற்றுப் பாடல்களுடன் ஒப்பிடுவதற்கும் அதிக இடம் உள்ளது.

**குக்கூ**

ஹைகூ எனும் கவிதை வடிவம் தமிழில் பரவிக்கொண்டிருந்த சூழலில் கவிஞர் மீரா, நானும் ஹைகூ எழுதிக் கொண்டிருக்கிறேன் ஆனால் அந்த இலக்கணத்தை அப்படியே பின்பற்றவில்லை எனக் கூறி குக்கூ என்ற வகையை அறிமுகப்படுத்தினார்.

சிறிய வடிவம், படிமக்காட்சி, விலங்குகளின் செயல்கள் மூலம் வாழ்க்கை வினோதங்களை வெளிப்படுத்துவது, காட்சிகளில் வாழ்க்கைத் தத்துவத்தைத் தரிசித்தல் போன்ற ஹைகூவின் பண்புகள் 'குக்கூ'வில் இருந்தாலும் வேறுபாடுகள் உண்டு.

மூன்றுவரி என்ற அடியளவைக் குக்கூ பின்பற்றவில்லை. எடுத்துக் கொண்ட பொருளுக்கேற்ப குக்குவின் வரிகள் கூடுதலாகவோ குறைவாகவோ அமைந்திருக்கும். இக்கவிதை வடிவம் பற்றிக் கவிஞர் பாலா, இவற்றிற்கு ஜப்பானிய உடையும் இல்லை, நடையும் இல்லை.

Scanned by CamScanner

மூன்று வரிச்சட்டங்களும் இல்லை. படிமம் கட்டாயம் என்ற சட்டமும் இல்லை. தமிழ்ச் சாயல், தமிழ்ப்பாட்டு, தமிழ்க்காற்று - இவை ஹைகூ என்று கூவுமா என்ன? குக்கூ என்றுதான் கூவும் எனக் கூறும் விளக்கம் 'குக்கூ' என்பதைத் தமிழ்க்கவிதை வடிவமாக நிலை நிறுத்துகிறது. 'குக்கூவின்' தனித்தன்மை ஹைகூவை தமிழ்ப்படுத்தியிருப்பது' என்ற அப்துல் ரகுமானின் கருத்தும் இங்கு நினைத்தற்குரியது.

தமிழில் வெளிவந்துள்ள மீராவின் குக்கூ கவிதைத் தொகுப்பைத் தவிர வேறு தொகுப்புகளை அடையாளம் காண முடியவில்லை. மீராவின் ஒவ்வொரு கவிதைத் தொகுதியிலும் ஒரு புதிய நவில் முறையைக் காணலாம். அவ்வகையில் குக்கூவும் தனித்த இடம் பெறுகிறது.

**"கூடல் நகரில்**
**கூட்டம்**
**கூட்டம் கூட்டம்**
**கூட்டம் கூட்டம் கூட்டம்**
**கூட்டம் பார்க்க"**

என்ற இக்குக்கூவில் கூட்டம் எனும் வார்த்தை திரும்ப திரும்ப இடம் பெற்று கூட்டத்தின் அடர்த்தி காட்சிப்படுத்தப்படுவதை உணரலாம்.

**"நகர்க்கரம் தீண்டும்**
**கிராமத்து வயல்களில்**
**காணோம் செந்நெல்**
**முளைத்துள்ள தெங்கும்**
**வெள்ளையடித்த**
**முக்காலடிக்கல்"**

என்ற குக்கூ கிராமங்கள் நகரங்களாக உருமாறும் எதார்த்த நிலையைப் படம்பிடித்துக்காட்டுகிறது.

கவிஞர் மீராவின் குக்கூ அறிமுகம் இதுவரை தமிழ் ஹைக்கூ கவிதைகள் காணாத புனைவு அற்ற பொது மொழியாக விளங்குவதோடு கிராமத்து அன்னிய வசீகரம், மனிதத் தன்மை பளிச்சிடும் எளிமை போன்ற தன்மைகளையும் பெற்றுத் திகழ்கின்றது எனலாம்.

Scanned by CamScanner